உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—௩௮.] விக்கிரமஹு மார்கழிமீ [பகுதி—உ.
Vol. 38. December 1940—January 41. No. 2.

## வண்ணமும் வடிவும்

[பிரபுத்தபாரத ஆசிரியர் ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள்.]

முன்னாளிலே, யவனபுரத்திலிருந்த சிற்பாசாரிகள் வெள்ளிய சலவைக்கல்லினைச் செதுக்கி, அழகிய உருவங்களை வகுத்தார்கள். அவ்வுருவங்களிற் சில மேனாட்டிலுள்ள காட்சிச்சாலைகளிலே, இன்றும் பார்ப்போர்கண்ணுக்கு உவகையளித்துநிற்கின்றன.

மிகப் பழையகாலத்திலே தமிழ்நாட்டிலிருந்த சிற்பநூல் வல்லார் வகுத்த உருவங்கள் நமக்குக் கிடைப்பதில்லை. அவ்வுருவங்கள் "மண்ணீடு" எனப்பட்டன; மண்ணி (சுதையி)னாலும் மரத்தினாலும் இயற்றப்பட்டனவாதலின், இப்பெயர் பெற்றன. இவைதம்மை இயற்றிய சிற்பிகள் மண்ணீட்டாளர் எனப்பட்டார். இவரை ஓவியர் என்பதும், இவர்க்குரிய நூலினை ஓவியச்செந்நூல் என்பதும் பழைய வழக்கு.

இடைக்காலத்திலே நமதுநாட்டிலே கருங்கல்லினாலே உருவங்களை அமைத்துக்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. மதுரையிலும் தென்காசியிலும் பேரூரிலும் மற்றுமிடங்களிலும் கோயில் மண்டபங்களிலே அமைக்கப்பட்டிருக்கிற உருவங்கள் தமிழரது சிற்பவல்லமையைச் சிறப்புறக் காட்டுகின்றன.

"எவ்வகை யுயிர்களும் உவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம்" (மணிமேகலை. காதை 3. அடி 129-131)

எனவும்,

"எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி
நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞர்" (மதுரைக்காஞ்சி. அடி 516-518.)

எனவும் கூறினமையின், பார்ப்போர்கண்களைக் கவருந்தன்மைய வாகிய ஓவியங்களை அமைப்போர் நுண்ணுணர்வும் நுழைந்த நோக்கும் உடையராதல்வேண்டுமென அறிகின்றும்.

வெண்சுதையில் தீட்டிய உருவத்தினது இயற்கைவண்ணம் வெளிப்படுமாறு வர்ணந்தீட்டுவோரும், வட்டிகைப்பலகையிலே துகிலிகைக்கோலினுலே பலவித வர்ணங்களை எழுதி அழகிய சித்திரங்களை அமைப்போரும் கண்ணுள்வினைஞர் எனப்பட்டார். 'கண்ணுள்வினைஞர் - சித்திரகாரிகள்' என அடியார்க்குநல்லாருரை கூறும்.

"வட்டிகை மணிப்பலகை வண்ண நுண் டுகிலிகை"

என்னும் சிந்தாமணிச்செய்யுளடியினுள்ளே கண்ணுள்வினைஞர்க்கு வேண்டிய கருவி மூன்றும் கூறப்பட்டன.

"துவாரவட்டிகை" என அடியார்க்குநல்லார் கூறுதலின், இக் காலத்து மேனாட்டுச் சித்திரகாரிகள் வழங்கும் (Palette என்னும்) பலகையினையொத்த வட்டிகைப்பலகைகளே பண்டைநாளிலும் இருந்தன என எண்ண இடமுண்டு.

தென்னாட்டுச் சித்திரவன்மையைக் காட்டும் பழைய சித்திரங் கள், சித்தண்ணவாசலிலும் தஞ்சைப் பெரியகோயிலிலும் ஈழ நாட்டுச் சிகிரியாக் குகையிலும் வடநாட்டு அஜந்தாகுகையிலும் உள்ளன. இவற்றைக் கூர்ந்து ஆராயின், பழந்தமிழ்நாட்டு அணி கலன் உடை கூந்தலமைப்பு என்று இன்னவும் ஆடவரும் மகளி ரும் அறங்கூறவையத்தும் விளையாட்டிடங்களிலும் வாழ்மனையி லும் வேற்றிடத்தும் எவ்வெச்செய்திகளை மேற்கொண்டிருந்தார்க ளென்பதும் தெளிவாகும்.

மண்ணீட்டாளர், கண்ணுள்வினைஞர் - ஆகிய இருபாலாரையும் ஓவியர் என்பதும் வண்ணம் வடிவம் என நுணுகி வேறுபடுத்தாது அனைத்தினையும் ஓவியம் என்பதும் ஒருதலை.

ஓவியனானவன் படாத்தில் வர்ணம் தீட்டியோ, சுவர்மீது சுதை யினுற் புனைந்தோ, வெண்சலவைக்கல்லைச் செதுக்கியோ, கருங்

கல்லினைப் பொளிந்தோ வெளிப்படுத்திய உருவத்தை அறிவுடையோன் நோக்கும்போது ஓவியனது கைவன்மையை வியப்பதோடமையாது, "ஓவியனுள்ளத்து உள்ளியது" இதுவெனக் கண்டு வியத்தல்வேண்டும். ஓவியனது உள்ளக்கருத்தே ஓவியத்திற்கு உயிர்போன்றது.

நவிலுந்தோறும் இனிமைபயக்கும் நூல்நயம்போலவும், பயிலுந்தோறும் இனிமைபயக்கும் பண்புடையாளர் தொடர்பு போலவும் பார்க்குந்தோறும் அறிவுடையோனுக்கு உவகையளிக்கும் ஓவியமே அழகிய ஓவியமாகும்.

"ஐயமும் அழகும்" என்னும் வியாசத்திலே காட்சியினும் ஐயம் மிக்கதெனவும் ஐயத்தினின்று வியப்புச்சுவை தோன்றுமெனவும் காட்டினும். இயற்கைப்பொருளை இயற்கையிற் றோன்றுமாறுபோலத் தீட்டிய வுருவம் காட்சியோடு அமைவதாகும்.

"பஞ்சரத்திலுள்ள கிளிப்பிள்ளை பொன்வட்டிலிற் பாலடிசில் உண்ணுவதை இவ்வோவியம் காட்டுகின்றது" எனக் காட்சி மாத்திரத்திலே அளந்து தீர்ப்பிடுதற்குரிய ஓவியம் அறிஞர்க்கு உவகைபயப்பதில்லை. "இப்பொழிலகத்தே நிற்கும் மாமரத்தின் கனியினை இக்கிளிப்பிள்ளை உண்கின்றது" எனற்குரிய ஓவியமும் முன்னையதைப்போல்வதே. ஆனால் ஓர் ஓவியன் இவ்விரண்டினையும் ஒரு படத்திலே சித்திரித்துத் தருகின்றான்: என வைத்துக் கொள்வோம். பொழில்நடுவில் அழகிய மாளிகை; மாளிகைமேன் மாடத்தில் ஒரு மடவரல் பஞ்சரத்திற் கிளிக்குப் பாலடிசிலூட்டுகின்றாள். பக்கத்திலுள்ள மாமரக்கிளையிலிருக்கும் கிளி தன்னிச்சையாக மாங்கனியினை உண்கின்றது.

இப்படத்தினைப் பார்த்தவுடனே நமதுசிந்தையிலே பலவேறு எண்ணங்கள் உதிக்கின்றன. இப்படம் சுதந்திரவாழ்க்கையையும் அடிமைவாழ்க்கையையும் குறிப்பிடுகின்றதா? அன்றேல், மனைவாழ்க்கையையும் துறவுவாழ்க்கையையும் காட்டுகின்றதா? பட்டினவாழ்க்கையையும் பட்டிக்காட்டுவாழ்க்கையையும் காட்டுகின்றதா? என இவ்வாறெல்லாம் சிந்திக்கின்றோம். கண்ணினைக் கவர்ந்தபடம் மனத்தினையும் கவர்ந்துவிட்டது.

"மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே"
(தொல். பொருள். செய்யு. 104)

எனத் தொல்லாசிரியர் செய்யுளுக்குக் கூறிய "நோக்கு" என்னும் இலக்கணம் ஓவியத்திற்கும் அமையவேண்டும். "கவியிதயம்" எதுவென நாம் ஆராய்ந்துகண்டு மகிழ்வுறுவதுபோல ஓவியனுள்ளத்தினையும் நாம் ஆராய்ந்து கண்டு மகிழ்வுறுமாறு ஓவியம் அமையவேண்டும்.

இளையோரும் அறிவிற்சிறியோரும் "பொரிமாவைமெச்சினன் பொக்கைவாயன்" என்றபடி, வெள்ளைப்பாடல்களையும் இயற்கைத் தோற்றத்தை அப்படியே அமைத்துக்காட்டும் ஓவியங்களையும் பாராட்டுவர். உண்மை அழகு இதுவென உணரும் ஆற்றலுடைய அறிஞர், உண்மைக்கவிகள் எழுதிய செய்யுள்நலனையும் உண்மையோவியன் அமைத்த சித்திரநலனையும் ஆராய்ந்துணர்ந்து மகிழ்வுறுவர்.

கவிதையானது ஐம்புலன்களையும் மனத்தினையும் கவரும் ஆற்றல்வாய்ந்தது. மண்ணீட்டாளரும் கண்ணுள்வினைஞரும் கண்ணினையும் மனத்தினையும் கவர்வார். இசைவல்லோர் கண்டத்தினாலும் கருவியினாலும் உளத்தைக் கவர்ந்து, செவிக்கு அமுதளிப்பார்.

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள" (திருக்குறள். 1101)

என விழைவுவயப்பட்ட தலைமகன்கூறுவதுபோலக் கவிச்சுவை தேர்வோன்,

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்கவி கண்ணே யுள"

எனக்கூறி விண்ணவரின்பத்தினும் மிக்க கவியின்பத்தை நுகர்வான்.

செவியின்பம், நாவின்பம், மூக்கின்பம், ஊற்றின்பமாகிய நான்கும் எடுத்துக்கொண்ட ஆராய்ச்சிக்குப் புறம்பானவையாதலின், அவைதம்மையொழித்து, வண்ணமும் வடிவமும் காட்டும் செய்யுளானது, வல்லான் வகுத்த ஓவியம்போன்று அகக்கண்ணுக்கு உவகையளிக்கும் மாண்பினை ஆன்றோர்செய்யுட்கள் சிலவற்றை எடுத்துக்காட்டி நிறுவுதல்மேற்கொள்வாம்.

"வினைபயன் மெய்யுரு வென்ற நான்கே
வகைபெற வந்த வுவமத் தோற்றம்"

என்னும் தொல்காப்பிய உவமவியற்சூத்திரத்தினுள்ளே மெய்யென்பது வடிவம் (வட்டம், சதுரம், கோணம் முதலாயின); உருவென்பது நிறம், வண்ணம் (வெண்மை, பொன்மை முதலியன): எனக் கூறப்பட்டது.

சொற்களாலே கவிவல்லான் புனையும் ஓவியமானது, கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டாளரும் புனையும் ஓவியத்தினும் சிறந்த இயங்கும் ஓவியமாகும். அஃதன்றியும் கவிதையோவியம், உவமம் தழுவிநின்று ஆராயுந்தோறும் ஆராயுந்தோறும் புதியபுதிய நலத்தினைக் காட்டவல்லது.

"வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக்கோடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ராரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்
என்கண் காட்டென் றென்னுளம் கவற்ற
வந்தேன்" (சிலப்பதிகாரம். காதை. 11. அடி 41–53.)

என மாங்காட்டு அந்தணன் வாய்மொழியாக இளங்கோவடிகள் ஓவியக்கவிதை புனைகின்றார். உவமானம் ஒருதனியோவியம், உவமேயம் மற்றோரோவியம். ஈரோவியமும் அகக்கண்முன் தோன்றி இரண்டற்ற (அத்துவித) நீர்மையாய் நிற்கின்றன. நாம் கண்டு பரவசமடைகின்றோம்.

முதலிலே உவமானத்தைத் தனித்துநோக்குவாம். ஒவ்வொரு மொழியினாலும் குறிக்கப்படுகிற வண்ணத்தினையும் வடிவினையும் அகக்கண்ணினாலே நோக்குதல்வேண்டும்.

வாளா "வேங்கடம்" என்னாது "வீங்குநீர் அருவி வேங்கடம்" என்றார், மலைக்கு அணிகலன்போன்று அழகினைநல்குவது நீரருவியாதலின்.

"ஓங்குயர்மலையம்" என்புழி மெல்லொற்றுத்தொடர்ந்த நெட்டெழுத்துத் தனக்குரிய மாத்திரையினும் நீண்டொலித்துக் குற வரும் மருளும் தெய்வக்குன்றின் உயர்வினையுணர்த்தி வியப்பினை அளிக்கின்றது.

"விரிகதிர்ஞாயிறு" என்னும் தொடர், பரிதிவட்டத்தினையும் அதனைச் சூழ்ந்து எத்திசையினும் பரவும் ஆயிரங்கதிர்களையும் கண்முன் கொண்டுவருகிறது. நிறைமதிக்கு அடுத்தநாளிலே குணதிசையில் ஞாயிறு உதிக்கக் குடபாலிலே வானவட்டத்தின் மேல் நிற்கும் திங்களே ஈண்டுத் "திங்கள்" என அடையின்றிக் குறிக்கப்பட்டது. அந்திமாலையிலே காவிரிப்பூம்பட்டினம் என்னும் பெண்ணணங்கு தோற்றிய தன்மையினை உரைக்கப்புகுந்த கூலவாணிகன்சாத்தனார்,

"குணதிசை மருங்கின் நாண்முதிர் மதியமும்
குடதிசை மருங்கிற் சென்றுவீழ் கதிரும்
வெள்ளிவெண் டோட்டொடு பொற்றோ டாக
எள்ளறு திருமுகம் பொலியப் பெய்தலும்,"
(மணிமேகலை. காதை. 5. அடி. 119—122)

என்றாரெனின், அவர்கூறியது "வீழ்கதிர்," இவருரைத்தது "விரிகதிர்" என்க.

"நன்னிறமேகம்" நல்ல நீலநிறத்தையுடைய மேகம் என உரையாசிரியர் கூறுவார்.

வானவில்லானது வட்டாகாரமாய் இந்திரநீலம் பூநீலம் நீலம் பச்சை மஞ்சள் பொன்மை செம்மை: என்னும் ஏழுநிறங்களும் பொருந்தி ஒளியொடும் திகழ்வது.

"உருவு கொண்ட மின்னே போலத்
திருவி லிட்டுத் திகழ்தரு மேனியள்"
(மணிமேகலை. காதை. 6. அடி. 9, 10.)

எனவும்,

"மின்னுக் கொடியொன்று மீவிசும்பிற் றோன்றுமால்"
(சிலப். 29. செங்குட்டுவன்கூற்று. அடி. 4.)

எனவும் வருதலின், வானவில்லும் மின்னற்கொடியும் தெய்வவொளி வீசுந்தகைய என அறிகின்றோம்.

"மிக்க அருவிநீரையுடைய வேங்கடமென்று பெயர்கூறப் படும் மலையினுச்சிமீதே ஞாயிறும் திங்களும் இருமருங்கும் ஓங்கி விளங்கிய இடைப்பட்ட இடத்தே நல்ல நீலநிறத்தையுடைய மேகம், தன் மின்னுகிய புதுப்புடவையையுடுத்துத் தன்வில்லாகிய பணியைப் பூண்டு நின்றது" என உவமான ஓவியம் காட்டப்பட்டது.

நீனிறமேகம் நெடியோனுக்கும், விரிகதிர்ஞாயிறு பகை யணங்கு ஆழிக்கும், திங்கள் பால்வெண்சங்கிற்கும், மின்னல் பொற் பூவாடைக்கும், வானிடுவில் அணிகிளராரத்திற்கும் ஒப்பாயின.

மேல்வரும் எடுத்துக்காட்டுச்செய்யுட்களையும் விரித்துரைத் துக்கொள்க.

"கோல நெடுங்கண் மகளிர் கூந்தல் பரப்பி யிருப்பப்
பீலி மஞ்ஞை நோக்கிப் பேடை மயிலென் றெண்ணி
ஆலிச் சென்று புல்லி யன்மை கண்டு நாணிச்
சோலை நோக்கி நடக்கும் தோகை வண்ணங் காண்மின்"
(சீவகசிந்தாமணி. 919)

"தீம்பாற் பசியி னிருந்த செவ்வாய்ச் சிறுபைங் கிளிதன்
ஓம்பு தாய்சீர் குடைய ஒழிக்கும் வண்ணம் நாடிப்
பாம்பா லென்ன வெருவிப் பைம்பொற் றோடு கழலக்
காம்பேர் தோளி நடுங்கிக் கரைசேர் பவளைக் காண்மின்"
(சீ–சி. 924)

"தாய்தன் கையின் மெல்லத் தண்ணென் குறங்கி னெரிய
ஆய்பொன் னமளித் துஞ்சும் அணியார் குழவி போலத்
தோயுந் திரைக ளலைப்பத் தோடார் கமலப் பள்ளி
மேய வகையிற் றுஞ்சும் வெள்ளை யன்னங் காண்மின்"
(சீ–சி. 930)

"திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை
யோம்பினர் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்
தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்
தாமு மவரு மோராங்கு விளங்கக்
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்"

(மதுரைக்காஞ்சி. 461–465)

சிறுவிரல்கள் தடவிப்பரிமாறச்
செங்கண்கோடச் செவ்வாய்கொப்பளிப்பக்
குறுவெயர்ப்புருவங் கூடலிழைப்பக்
கோவிந்தன் குழல்கொடு ஊதினபோது
பறவையின் கணங்கள் கூடுதுறந்து
வந்துசூழ்ந்து படுகாடுகிடப்பக்
கறவையின்கணங்கள் கால்பரப்பிட்டுக்
கவிழ்ந்திறங்கிச் செவியாட்டகில்லாவே.

(பெரியாழ்வார்திருமொழி. 3–6–8)

திரண்டெழுதழை மழைமுகில்வண்ணன்
செங்கமலமலர்சூழ் வண்டினம்போலே
சுருண்டிருண்டகுழல் தாழ்ந்தமுகத்தான்
ஊதுகின்ற குழலோசைவழியே
மருண்டுமான்கணங்கள் மேய்கைமறந்து
மேய்ந்தபுல்லுங் கடைவாய்வழிசோர
இரண்டுபாடுந் துலுங்காப் புடைபெயரா
எழுதுசித்திரங்கள்போல நின்றனவே.

(பெரியாழ்வார்திருமொழி. 3–6–9.)

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவும் மதுர வாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும் செம்பொற் றாளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.

(திருநாவுக்கரசுசுவாமிகள்புராணம். 225.)

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

(திருஞானசம்பந்தசுவாமிகள்புராணம். 728.)

# கம்பராமாயணசாரம்

[ஸ்ரீ. ராவ்ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.]

௨அ-ஆம் பக்கத் தொடர்ச்சி.

## இலக்குமணன் போர்

இலக்குமணன் அந்தகாத்திரத்தை (யமனை அதிதேவதையாகவுடைய அம்பை) அபிமந்திரித்துப் பிரயோகஞ்செய்து ஆள் பரி கரி தேர் என்னும் நால்வகைப் படைவீரரான இராக்கதர்கள் கூட்டங்கூட்டமாக எதிர்த்து வர வர, அவர்கள் எல்லாரையும் கொன்று வீரசுவர்க்கத்தில் இடம்போதாமல் நெருங்கி நிறையும்படி செய்தான்.*

## அனுமானது தண்டாயுதப்போர்

போர்க்களத்திலே கும்பகருணனால் போடப்பட்டிருந்ததும், அவன் முன்னாளில் தேவரைத் தோற்றோடச் செய்தற்குத் துணையாயிருந்ததும் (யாவராலும் தூக்கியெடுக்கச் சாத்தியப்படாமல் சும்மா உபயோகமின்றிக் கிடந்ததும்) ஆன தண்டாயுதத்தை அனுமான் கையில் எடுத்து, கடுவேகமும் கொடுங்கோபமும் கொண்டு, உலகமுழுதும் வியாபித்துள்ள திருமாலென்னும்படி (போர்க்களமுழுதும் வேகமாகத் திரிந்து) எங்கும் உள்ளவனாகி, தேர்கள்மேலும் யானைகள்மேலும் குதிரைகள்மேலும் கூட்டங்கூட்டமாக எதிர்த்துவரும் இராக்கதர்களைத் தலைகளிலும் உடல்களிலும் தாக்கிக் கொன்றான். அவன், யானைகளின் மத்தகங்கள் பிளக்கப்பட்டு அவற்றினின்றும் தெறித்த முத்துக்கள் மொய்த்த

* 'அரக்க ரைப்பெருந் தேவர்க ளாக்கின அமலன்
சரத்தின் வேறினிப் பவித்திர முளதெனத் தகுமோ'
(இப்படலம்–கக.)

பவித்திரம் - பரிசுத்தம்.

உடலினனாகி, யுகாந்தகாலத்தில் நட்சத்திரங்கள் தொத்தப்பெற்ற மேருமலையொத்தான்; மண்ணையும் விண்ணையும் இடித்தானென, பூமியில் அடியிட்டு ஆகாயத்தில் முடிதட்டப் போர்க்களமெங்கும் திரிந்து தேர்ப்படைமுதலிய நாற்படைகளையும் தண்டால் அடித்து, அவைகளை இரத்தத்தோடு கலந்து சேருகும்படிசெய்தான்.

### வானரப்படைத்தலைவர், போர்க்களத்தில் பிரிந்து, நெடுந்தூரங்களிலுள்ளவராதல்

சுக்கிரீவன், அங்கதன், நீலன், குமுதன், சாம்பன், பனசன் முதலிய படைத்தலைவர்கள், போர்க்களத்திற் புகுந்து, போர்வெறி பூண்டு பொருதவர்கள், அளவற்ற அரக்கர்சேனைக்கடலினுள்ளே, ஒருவரையொருவர் காணாதபடி, நெடுந்தூரங்களிலே உள்ளவரானார்.

### அனுமான் அகம்பனைச் சந்தித்தல்

இராக்கதக்கூட்டங்களை வாரி வீசிக்கொண்டு, சேனாசமுத்திரத்தினூடே, தண்டாயுதனைப், நகாயுதனான நரஸிங்கமூர்த்தி போல, வீறுடன்சென்ற அனுமான், அகம்பனென்ற அரக்கர் படைத்தலைவனைச் சந்தித்தான். அவன், முந்தின சென்மத்தில் தாருகாசுரனென்ற பெயர்படைத்தவனும் குமாரக்கடவுளாற் கொல்லப்பட்டவனுமாவன். அவன், ஆயிரம் பெருங்கழுதைகள் பூட்டப்பெற்ற மனவேகத்தினும் மிகுவேகமுடைய தேரின்மீதே விற்பிடித்த கையினனாய்க் காணப்பட்டான்.

### அனுமான்வீரத்தை அகம்பன் வியத்தல்

அவன், 'தேவேந்திரனும் திருமாலும் சிவபிரானும் இந்தக் குரங்கின் எதிர்நிற்கமாட்டார்கள். இது தன்னை எதிர்த்தவர் எவராயினும் அவரை எமனுக்கு இரையாகக் கொல்லவல்லது' என்று அனுமானது வீரச்செயல்கண்டு வியந்தான்.

அகம்பன், 'இவனை (அனுமனை) யான் தடுக்கேனாயின், இவனால் பூமியே பாழாய்விடும். இராக்கதர் என்ற பெயரையும் மாய்த்துவிடுவான்' என்று சரமாரி சொரிந்துகொண்டு, அனுமான்

எதிரே சென்றான். அனுமானும் அகம்பனெதிரே, தன் கைத் தண்டைச் சுழற்றிக்கொண்டு, விரைந்துசென்றான். அகம்பனும் அவனுடன் வந்த அரக்கரும் எய்த, எறிந்த, எற்றிய ஆயுதங்கள் எல்லாவற்றையும் அனுமான் சுழற்றிய தண்டினால் தொலைத்தான். அகம்பன் பார்த்துக்கொண்டேயிருக்கையில் அனுமான், அவனுடைய பத்துக்கோடி யானைகளையும் அத்தனை குதிரைகள் தேர்களையும் தண்டுகொண்டு தாக்கிக் கண்டதுண்டமாக்கினான்.

## அகம்பன் அனுமானோடு பொருதல்

'இன்று, இவனை (அனுமனை) வீரசுவர்க்கத்திலேற்றி இராவணனை வெற்றியும் இராமலக்குமணரைத் தோல்வியும் இமையோரைத் துன்பமும் அடையச்செய்வேன்' என்று, அகம்பன், அனுமானெதிரே வந்தான். அனுமான், 'வருக' என வரவேற்று, எதிரே சென்றான். அகம்பன், குகைபோலும் பகுவாயை மடித்துப் புகையும் நெருப்பும் புறப்படக் கண்களை விழித்து, தேரைத் தூண்டி, மேகம் இடித்தல்போல ஆரவாரித்து, மேகத்தினும் மும்மடங்கு அதிகமாக அம்புமழை பொழிந்துகொண்டு, அனுமானைக் கிட்டினான். இடியேறுகள்போல்வனவும் திசைகளிலெல்லாம் தீப்பொறி சிதறுவனவும் தேவர்கள்மார்பை அரிந்தனவுமான, அகம்பன் எய்த அம்புகள், அனுமான் தோள்மேலும் மார்பின்மேலும் தோன்றின. அந்த அம்புகளால் நேர்ந்த சோர்வு தீருமுன்பு, அனுமான், அகம்பன் தேரிற் பூண்ட கழுதைகளையும் சாரதியையும் அச்சுக்களையும் தண்டுகொண்டு கண்டதுண்டமாக்கினான்.

## அனும அகம்பர் தண்டாயுதப்போரும் அகம்பன் சாவும்

அகம்பன், அனுமானை வில்லினால் வெல்லுதல் அசாத்தியமென்று கருதித் தெய்வத்தச்சனால் நிருமிக்கப்பெற்றதான, தன் வசமிருந்த தண்டாயுதத்தைக் கைக்கொண்டான். அனுமானும் அகம்பனும் ஒருவரையொருவர் தாக்கினார்; வலசாரி இடசாரி வந்தார்; ஆரவாரித்தார்; தோள்கொட்டினார்; கிட்டினார்; கட்டினார்; தூக்கினார்; சுற்றினார்; விண்மேல் தாவினார்; மண்மேல் மேவினார். இவ்வாறு, இருவரும் நெடுநேரம் போர்செய்தபின், அனுமான்,

அகம்பன்மார்பிலே தண்டினல் மோத, அதனை அவன் தன்கைத் தண்டினல் விலக்கியபோது, அந்த ஆயுதமும் அதனைப்பற்றியிருந்த கையும் முறிந்துவிழுந்தன. தண்டும் தண்டுபற்றிய வலக்கையும் இழந்தவன், இடக்கையினல், வயிரமலைமேல் இடியேறு தாக்கினற் போல, அனுமான்மார்பில் அடித்தான். அடித்தவன் நிராயுதனுயிருத்தலால், அனுமான், அவனைத் தன் கைத்தண்டுகொண்டு தாக்குதல் தருமமன்றென்று, இடக்கையினல் அவன்மார்பிலும் வாயிலும் இரத்தங்கக்கக் குத்தினன். பின்னும், அந்த இடக்கையினல், அவன் காதிடத்து மோதிக் கீழேதள்ளி அவன் உயிர் வானவர் கூட்டத்திற் சேரச்செய்தான். அதுவரை, அனுமனை எதிர்த்து நின்ற இராக்கதர்கூட்டமெல்லாம், சிங்கத்தைக் கண்ட காட்டு மிருகங்கள்போலத் திசைகளெல்லாம் சிதறியோடின.

### இலக்குமணனெய்த அம்புகளால் இராக்கதசேனையெல்லாம் இறத்தல்

இலக்குமணன் எய்த அம்புகளால், தேர்கள் முறிந்தன, குதிரைகள் துண்டங்களாயின, யானைகள் விழுந்தன, காலாள்கள் மடிந்தனர்.

### இலக்குமணன்முதலியோர் எங்குள்ளாரென்று தெரியாமல், அனுமான் வருந்தல்

அனுமான், மற்றைப் படைத்தலைவர் ஆரவாரிக்கும் குரலையும் இலக்குமணன் வில்நாணைத் தெறிக்கும் ஓசையையும் கேளானய், யாருக்கு என்னதுன்பம் நேர்ந்துள்ளதென்பதைச் சொல்லுவார் இல்லாமையால் தெரியமாட்டாதவனய் மனவருத்தமடைந்தான்.

### இலக்குமணன்முதலியோர் இருந்த தூரங்கள்

மிகப்பரந்த இராக்கதசேனசமுத்திரத்திலே, தென்மேற்றிசையிலே, எழுயோசனைதூரத்திலே அங்கதனும், அதற்கு இரட்டிதூரத்திலே சுக்கிரீவனும், அதற்கப்பால் இரட்டிக்கிரட்டி தூரத்திலே இலக்குமணனும் சென்றிருந்தார்கள். மற்றைய படைத்தலைவர்கள், போர்புரிந்துகொண்டு, நாலும் ஐந்துமான யோசனை சென்றிருந்தார்கள். அனுமான், இலக்குமணனிருக்குமிடத்துக்கு இரண்டு மூன்று காதமிருக்கச் சென்றுன்.

## இலக்குமணன்செய்த போரினல் நிகழ்ந்த குறிகள்

இலக்குமணன் உள்ள இடத்தை அடைவேனென்று ஊழிக் காற்றுப்போல வேகமாகச் சென்ற அனுமான், ஆனைத்தந்தங்களை யும் பீலிக்குடைகளையும் பொன்னாரம் இரத்தினமாலை முத்துவடங் களையும் வாரிக் கொழித்துக்கொண்டு, மீன்களென்னுமாறு படைக் கலங்கள் இடையிடையே தோன்ற, நுரைபோல வெண்கொற்றக் குடைகள் மிதக்கச்செல்லுகின்ற இரத்தப்பேராற்றைக் கண்டான்; அம்புகள், தம்மால் அறுபட்ட அரக்கர்தலைகளோடு ஆகாயத்தை முட்டி, யுகாந்தகாலத்திலே கல்மழைபொழிவனபோல, உலக முழுதும் அதிர, விழுபவைகளைக் கண்டான்; இராக்கதவீரர் விடுத்த படைக்கலங்கள் இலக்குமணன் அம்புகளால் தாக்குண்டு தகர்ந்து தீப்பொறிசிதறி விண்மீன்கள் மண்மேல் வீழ்வனபோல விழுதலைக் கண்டான்; இராக்காலத்திலே மயானத்திலே கூத்தாடும் சிவபிரானது செஞ்சடை (தானும் ஆடித்) திசைகளெங்கும் சென்று விரிந்துபரந்து திகழ்ந்தாற்போல (இராத்திரிப் போர்நிகழும் போர்க் களத்திலே) இலக்குமணனுடைய அம்புகள் எல்லாத்திக்குக்களி லும் சென்று ஆகாயமெங்கும் தாமேயாய் (தீப்பொறிசிதறி) விளங்கு வதைக் கண்டான்; தலையறுபட்ட இராக்கதர்களின் உடல்களாகிய கவந்தங்கள் கழுத்தினின்று உயரக்கொப்புளிக்கும் இரத்தத் தோடு காணப்படுவன, இப்போது இராத்திரியென்று ஏற்றிவைக் கப்பெற்ற விளக்குக்கள்போல்வதைக் கண்டான்; நாள்முழுதும் எண்ணினும் எண்ணமுடியாத, தம்மீதிருந்த வீரர்கள் (கொல்லப் பட்டதனல்) இல்லாத தேர்களும் யானைகளும் குதிரைகளும் அரச னில்லாதநாட்டுக் குடிகள்போல அலைவதைக் கண்டான்; இலக்கு மணன் எய்த எண்ணிறந்த அம்புகளால் மாண்ட அளவற்ற அரக் கர் பிணமலைகளையும் இரத்தக்கடல்களையும் படைக்கலக்காடுகளை யும் கண்டான்.

## அனுமான் இலக்குமணனைக் காணல்

தான் கண்ட மலை கடல் காடுகளைத் தாண்டிக் கடந்துசெல் லும் அனுமான், அண்டத்தைக் கிழித்ததென்னும்படி ஒலித்த இலக்குமணனது வில்நாணோசையைக் கேட்டான். கேட்டவன்,

கவலைநீங்கிக் களிப்புற்று, ஓசைபிறந்த இடத்தைநோக்கிச் சென்று, இலக்குமணனைக் கண்டு வணங்கினன். இலக்குமணன், அனுமானைத் தழுவி, 'நமது படைத்தலைவர் எங்குள்ளார்கள்? சுக்கிரீவன் உன்னைப் பிரிந்ததெவ்வாறு? அங்கதன் எங்கேபோனன்? இந்த விரிந்த இருளிலே பரந்த சேனைவெள்ளத்திடையே விளைந்ததொன்றும் தெரிந்திலேன். நீ தெரிந்ததைச் செப்புவாயாக' என, அலைகடலையும் ஐந்திரவியாகரணக்கடலையும் கடந்த அனுமான் சிரசிற் செங்கைகூப்பியவனய்ச் செப்புகின்றான்.

### அனுமான், ஒருவரையொருவர் காணமல் மயங்கியது எதிரிகள்மாயத்தாலெனல்

'போனவர்கள் போனவிதமும், போரிலே அடைந்தவகையும் சிறிதும்தெரியேன். நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அவர்கள் திரும்பிவந்தபோது தெரியலாம். எதிரிகளின் மாயவித்தையினல் இந்த மயக்கம் நேர்ந்திருக்கிறது. தெய்வப்படையினல் இதனைப் போக்கினலன்றி, உன் அடியவர் உன்னை அடையார்' என்றான்.

### இலக்குமணன் பாசுபதாத்திரத்தை விட, இராக்கதசேனை யெரிதலும் மாயை நீங்கலும்

இலக்குமணன், 'அது செய்வேன்' என்று பாசுபதாத்திரத்தைப் பிரயோகித்தான். மூங்கிற்காட்டுள்ளே புகுந்த தீப்போல, அந்தச் சிவபிரானுடைய அத்திரம் அரக்கர்சேனையனைத்தையும் எரித்தழித்து, (எல்லாரையும் மயக்கிக்கொண்டிருந்த) மாயஇருளைப் போக்கியொழித்தது. தெய்வப்படையினல் தன் மாயைநீங்கியதைச் சிந்தையிற்கொண்டு மகோதரன் மறைந்துபோனன். பிரிந்திருந்த வானரரெல்லாரும், திரும்பி இலக்குமணனை அடைந்து வணங்கி ஆரவாரித்து ஆனந்தக்கூத்தாடினர்கள். ஒருவருக்கும் தீங்கு நேரவில்லையென்று தெரிந்து, யார்யாருக்கு யாதுயாது நேர்ந்ததோவென்றுகொண்டிருந்த ஐயம் நீங்கி, இலக்குமணன் மகிழ்ந்திருந்தான். பொன்னுலகோர் பூமாரிபொழிந்தார்கள்.

## தூதர், இராக்கதசேனை எரிந்ததென, இராவணனுக்கும் இந்திரசித்துக்கும் தெரிவித்தல்

இராவணனிடம் தூதர்கள் சென்று, 'அரக்கர்சேனையெல்லாம் அழிந்தன' என, அவன், 'நூறுவெள்ளஞ்சேனையை வில்லினாற் கொல்லல்கூடுமோ?' என, அவர்கள், 'இலக்குமணன் பாசுபதாத்திரம் பிரயோகிக்க, அத்தனைசேனையும் அக்கினிக்கு இரையாயின' என, அவன், 'அப்படியானால், அது (அத்தனைசேனையும் அழிந்தது) நிகழ்ந்திருக்கும்' என்று கூறி, 'நீங்கள் இச்செய்தியை என் மகனுக்குத் தெரிவியுங்கள்' என்றான். உடனே, அவர்கள், ஓடிப் போய், நிகழ்ந்ததை இந்திரசித்துக்குத் தெரிவித்தார்கள். அவன், திடுக்கிட்டு, 'இராமன் எங்குள்ளான்? அநுமானும் விபீடணனும் எங்கேயிருக்கின்றார்கள்?' என, அவர்கள், 'இராமன் வேறொரு மலைக்குப்போனவன் திரும்பிவரவில்லை. உணவுப்பொருள்கள் வரத் தாமதித்ததனால், அவைகளைக் கொணருதற்கு, விபீடணன் போயிருக்கிறான்' என, அவன், 'மகோதரன் எவ்விடத்திருக்கின்றான்?' என, அவர்கள், 'ஆகாயத்திடத்தேயுள்ளான்' என, அவன், '(மகோதரன் போர்புரிவது) அழகாயிருக்கிறது!' என்றான்.

## இந்திரசித்து பிரமாத்திரத்துக்குரிய வேள்விசெய்தல்

இந்திரசித்து, பிரமாத்திரப் பிரயோககாலம் சமீபித்ததென்று, அதன்பொருட்டு வேள்விசெய்தற்குப் பெரியதோர் ஆலமரத்தடியை அடைந்தான். இராட்சசப்பிராமணர் வேள்விக்கு வேண்டிய கலப்பை (உபகரணப்பொருள்)களைக் கொண்டுவந்துசேர்த்தார்கள். அவன், அம்புகளைச் சமித்து (யாகத்தீயிலிடும்சுள்ளி)களாக அமைத்து, தும்பைமலர்களைத்தூவி, காரெள்ளைச்சொரிந்து, (வெள்ளாடென்ற) காராட்டின் கொம்பு, பல், சதை, இரத்தம் ஆகியவைகளை இட்டு, நெய்யைப் பெய்து, ஓமஞ்செய்தான். ஓமாக்கினி வலஞ்சுழித்து ஓங்கியெழுந்து நற்குறிகாட்ட, இந்திரசித்து, வெற்றி கைகூடுமென்று கருதி, களித்தெழும்பி, ஆகாயத்தையடைந்து, தன் மாயையினால் தேவரும் அறியாதபடி மறைந்து, சுபக்கிரகமும் செயகாலமும் வருவதை யெதிர்பார்த்துக் காத்திருந்தான்.

## மகோதரன் மாயப்போர்

அப்போது, மகோதரன், (மறைந்து பதிவிருக்கும் இந்திரசித்துக்கு உதவியாக, யாது செய்யத்தக்கதென்று) ஆராய்ந்து, ஒரு மாயம் விளைத்தல்கருதி, தன் மாயவித்தையினால், தான் இந்திரனாகவும் தான் ஏறியிருந்த வாகனம் இந்திரனது வாகனமான ஐராவதமென்ற நான்குகொம்புகளுள்ள வெள்ளையானையாகவும் தன் பரிவாரமான இராக்கதர் தேவராகவும் தோன்றுமாறு செய்து, அரக்கர், மனிதர், வானரர்களும் உலகத்துள்ள மற்ற எல்லாப்பிராணிகளும் அவனோடு சேர்ந்து அவனுக்கு உதவியாகப் போர்செய்யவந்தனவாகத் தோற்றச்செய்தான். அதைக் கண்டு (உலகமுழுதும் ஒருங்குகூடித் தம்மை எதிர்த்தற்கு வந்திருப்பதாகக் கருதி) வானரசேனைகள், நடுங்கி, தேவேந்திரனும் அவனோடு தேவரேயன்றி முனிவரும் கோபாவேசராய், நம்மோடு பொரவருவானேனென்று மயக்கமும் வருத்தமும் அடைந்தன. அப்போது, இலக்குமணன், அனுமானை நோக்கி, 'தேவரும் முனிவரும் சீறி வந்த காரணம் யாது' என வினவினான்.

## இந்திரசித்து பிரமாத்திரத்தைப் பிரயோகிக்க, இலக்குமணனும் வானரரும் இறத்தல்

இலக்குமணன் மேற்கூறியவாறு வினவிய தற்சமயத்தில், இந்திரசித்து, பிரமாத்திரத்தை எய்தான். பொன்மலைமீது குருவிகள் மொய்த்தாற்போலக் 'கோடிகோடி நூறுயிரங் கொடுங்கணைகள்' இலக்குமணன்மேற் பாய்ந்தன. அவன், செய்வது இன்னதென்று தெரியானாய்ச் சோர்ந்து, யானை கூடத்தில் படுத்தாற்போல, விழுந்து தன்னை மறந்தான்.

அனுமான், இந்திரன் வந்த காரணம் யாதென எண்ணி, '(காரணம் யாதாயினும் ஆகுக); அவனை ஆனையோடும் எடுத்து மோதுவேன்' என்று எழுந்தபோது,

*'தனுவின் ஆயிரம் கோடிவெங் கடுங்கணை தைக்க
நினைவும் செய்கையும் மறந்துபோய் நெடுநிலம் சேர்ந்தான்.'

* தனுவின் - உடம்பில்.

சுக்கிரீவன், மலைமேல் முருக்கமரக்காடு நிறையப் பூத்தாற் போல, உடம்பெங்கும் அம்புகள் தைத்த புண்களினின்று இரத்தம் பெருக, உருக்கிய செம்புபோலக் (கோபத்தினால்) கண்கள் சிவக்கத் தரையிலே சாய்ந்தான்.

பதினாயிரம் அம்புகள் பாய, இடியேறுண்ட சிங்கம்போல அங்கதன் விழுந்தான்.

தோளிலும் மார்பிலும் கணைகள் துளைக்கச் சாம்பவான் சாய்ந்தான். ஆயிரம் அம்புகள் மார்பில் அழுந்த, நீலன், காலன் முகத்தைக் கண்டான். விடம்போன்ற பாணங்களால் பனசனும் பட்டான். இந்திரசித்தின் அம்புருவங்கொண்ட எமனால் குமுதன், நளன், மயிந்தன், கவயன், கேசரி, சதவலி, சுதேடணன், வினதன், கந்தமாதனன், இடும்பன், ததிமுகன்: ஆகியவர்களும் மற்றைய வானரவீரரும் மாண்டார்கள்.

### மடிந்த வானரசேனை வருணனை

உடம்பெங்கும் இரத்தம் ஒழுக மடிந்துகிடந்த வெண்ணிற வானரர்கூட்டம், பவளக்கொடி படர்ந்த பாற்கடல்போன்றது.

### மடிந்து வானுலகம் அடைந்த வானரர்களை வானவர் வரவேற்று உபசரித்தல்

இறந்த வானரப் பெரும்படை வானுலகத்தையடைய, வானவர் வரவேற்று, விருந்தினராக உபசரித்து, 'திருமாலின் அமிசமான இராமனுக்கு அடியரான நீங்கள் இறக்கக்கடவீரல்லீர் (இறந்திலீர், இறக்கும்பாவனையால்) பிரமன்படைக்குப் பூசனை புரிந்தீர். இராமன் அடியார், (பிறவிக்கட்டினின்று விடுபடாத பிறரடையும் இந்தச் சுவர்க்கத்தை அடையார். அவர்கள்) பிறவிக் கட்டுக் கழலப்பெற்றவராய், (மீளும் சுவர்க்கபதத்தினும் மேலான மீளாப்பதமான) பரமபதத்தை அடைவார். (இராட்சச சங்கார மான) எங்கள் காரியத்தைச் செய்துமுடித்தற்காகப் பூலோகத்துக் குப் போனீர்கள். உங்களுயிர் எங்களுயிர். உடல்மாத்திரம் வேறாக உள்ளீர். எங்கள் காரியத்தை முடிக்கப் பூலோகத்துக்குத் திரும்பிப் போங்கள்' என்று கூறினார்கள்.

## இராவணனுக்கு, நிகழ்ந்ததைத் தெரிவித்து, இந்திரசித்தும் மகோதரனும் தம் இருப்பிடம் சேர்தல்

இந்திரசித்து, 'இலக்குமணனும் வானரரும் மடிந்தார்கள். இராமன் இங்கு வந்தானில்லை. (வந்திருந்தால், மாண்டிருப்பான்)' என்று இகழ்ந்து, வெற்றிச்சங்கை ஊதிவிட்டு, இராவணனை அடைந்து, போர்க்களத்தில் நிகழ்ந்ததைப் புகன்றான். அவன், 'இராமன் இறந்திலனோ' என, 'இராமன் எல்லாரையும்விட்டு நீங்கியிருந்தான்; நீங்காதிருந்தால், மறந்தும் தம்பியையும் நண்பரையும் சேனையையும் மடியவிட்டிருப்பானோ?' என்றான். பின்பு, அவனும் (இந்திரசித்தும்) மகோதரனும் தம் இருப்பிடம் சேர்ந்தார்கள்.

## இராமன் அத்திரபூசைமுடித்துப் போர்க்களத்துக்குத் திரும்புதல்

அத்திரபூசை செய்யப்போன இராமன், விதிப்படி அந்தப் பூசையைச் செய்துமுடித்தான். பின்பு, போர்க்களத்துக்குத் திரும்ப எண்ணி, அள்ளியுண்ணலாமென்னும்படி (அஞ்சனக்குழம்பு போல) அடர்ந்திருந்த அந்தகாரத்தை அக்கினியத்திரத்தினால் அகற்றிச்சென்று, போர்க்களத்தையடைந்து, மடிந்துகிடக்கும் வானரத்தலைவரைத் தனித்தனியாகப் பார்ப்பானானான்.

## இறந்தவரைக் கண்டு இராமன் இரங்கல்

இராமன், சுக்கிரீவனைக் கண்டு, கண்ணீர் தாரைதாரையாக ஒழுகவிட்டுப் பெருமூச்செறிந்தான். பக்கத்தே கிடந்த அனுமானது நிலைமையைநோக்கி, 'கடலைக்கடந்தாய். அரக்கரைக் கருப்பங் கலங்கச்செய்தாய். (சீதையைக் கண்டு அவள் சேமத்தைத் தெரிவித்து,) என்னைத் துன்பத்தினின்று நீங்கியிருக்கச்செய்தாய். இவ்வாறெல்லாம் எனக்கு உதவியது, இந்நிலைமையை (இறத்தலை) அடைதற்குத்தானோ! அரக்கன் அம்பு உன் வயிரவுடலைத் துளைக்க வல்லனவாயினவோ?' என்று புலம்பினான். 'முன்னாளில், உனக்கு (ப் பிரமன் இந்திரன் முதலிய) தேவர்கள் அருளிய வரங்களும், முனிவர்கள் வாழ்த்திய வாழ்த்துக்களும்,

"ஊழி ஓர்பகலா ஓதும் யாண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும் வீவுற்ற ஞான்றும்* இன்றென இருத்தி"

---

* வீவு - அழிவு. ஞான்று - நாள்.

என்று நீ சிரஞ்சீவியாயிருக்கும்படி) சீதை உதவிய வரமும், என் வினைக்கொடுமையால் பயன்படாமற்போயின. இழிவான அரசாட்சியை ஏற்றுக்கொண்டதனால், என் தந்தையைக் கொன்றொழித்தேன்! எனக்குத் தந்தை(முறை)யான சடாயுவைச் சாகச்செய்தேன்! இன்று இத்தனை வீரரையும் இறக்கச்செய்தேன்! (நல்லாரெல்லாரையும் இறக்கச்செய்த தீயேன் இறவாது) அவத்தனாயிருக்கின்றேன்! தமையன் வாலியைக் கொன்று தம்பி சுக்கிரீவனுக்கு, வானரத்தலைமையளித்து (நன்மைசெய்தேன்போலத் தோன்றி) அவனையும் வானரரனைவரையும் அழித்திட்டேன்' என்று சொல்லிப் புலம்பினான். ]

137 விடைக்கு லங்களி னடுவணோர்[1] விடைகிடந் தென்னக்
கடைக்கண் டீயுக அங்கதக் களிற்றினைக் கண்டான்
படைக்க லங்களைச் சுமக்கின்ற[2] பதகனேன் பழிபார்த்
தடைக்க லப்பொருள் காத்தவா றழகிதென் றழுதான்.

கொண்டுகூட்டு: விடைக்குலங்களின் நடுவண் ஓர் விடைகிடந்தென்னக் (கிடக்கின்ற) அங்கதக்களிற்றினை (இராமன்) கடைக்கண் தீஉகக் கண்டான். 'படைக்கலங்களைச் சுமக்கின்ற பதகனேன், பழிபார்த்து அடைக்கலப்பொருள் காத்தவாறு அழகிது!' என்று அழுதான்.

பொருள்: காளைக்கூட்டத்தின் நடுவே ஒரு காளை கிடந்தாற்போல (இறந்த வானரரிடையே கிடக்கின்ற) அங்கதனை இராமன் கண்டான்; (கண்டவன், 'என் நண்பர்களை எதிரி கொல்லாமற் காத்தற்குப் பயன்படாத வீண்சுமையான கோதண்டமுதலிய) படைக்கலங்களைச் சுமக்கின்ற பாவியேன், (வாலி மரணாந்தகாலத்தில் தன் மகன் அங்கதனை அடைக்கலப்பொருளாக என்கையில் ஒப்புவித்திருக்க, அந்த) அடைக்கலப்பொருளை நான் காத்தவாறு அழகாயிருக்கிறது' என்று புலம்பி அழுதான்.

விடை - எருது. நடுவண் - நடுவில். உக - சிந்த. களிற்றினை - ஆண் யானையை - ஆண்யானைபோல்வானை. பதகன் - பாதகன் - கொடும்பாவி. 'என்னக் கிடக்கின்ற' என்பது 'என்ன' எனத் தொக்கது. 'கடைக்கண் தீ உகக் கிடக்கின்ற அங்கதற் கண்டான்' என்று பாடமிருந்தால், 'கிடக்கின்ற' என்பதை வருவிக்கவேண்டியதில்லை. 'அழகிது', அபகீர்த்தியானது என்று பொருள்கொள்ளநின்றது.

இராமன், தன் அடைக்கலப்பொருளான அங்கதன் கொல்லப் பட்டுக்கிடந்ததைக் கண்டபோது, அவனைக் கொன்றவன்மீது கொண்ட கோபத்தால் கண்கள்சிவந்தானென்பார், 'கடைக்கண் தீ உகக் கண்டான்' என்றார். அங்கதனைத் தான் காவாமற்போனது பற்றிய தன்மீதுள்ள கோபத்தால், தன்னையே தான் பரிகசிப்பானாய், (காவாமையினால்வரும்) 'பழியைப் பாராது' என்பதைப் 'பழிபார்த்து' என்றும், 'காவாதவாறு' என்பதைக் 'காத்தவாறு' என்றும், 'அழகற்றது' (-விகாரமானது) என்பதை 'அழகிது' என்றும் எதிர்மறைக்கருத்துக்களை உடன்பாட்டுச் சொற்களாற் கூறினனென்றார்.

'கடைக்கண் தீ உக' என்பதை இராமன்செயலாகக்கொள்ளாமல், அங்கதன்செயலாகக்கொண்டால், 'கிடந்த' என்பதை 'கிடந்தெனன' என்பதின்பின் வருவியாது, 'தீயுக' என்பதன் பின் வருவித்துப் பொருள்கூறல்வேண்டும்.

பாடபேதம்: [1] இடையொரு, நடுவொரு, [2] படைக்க லக்கடல் சுரக்கின்ற, படைக்க லஞ்சுமந் துழல்கின்ற.

## இராமன் இலக்குமணனைக் காணல்

[ பாற்கடல்நடுவே, ஆதிசேடனென்ற பாம்புப்படுக்கைமீது கண் வளர்கின்ற திருமால்போல, இரத்தவெள்ளஞ்சூழ்ந்த பிண அணை மீது தூங்குவான்போலக்கிடந்த இலக்குமணனை இராமன் கண்டான்.

## இராமன் துயரம்

கண்டவன், துக்கம்பொங்கப் பொருமித் தருமதேவதை கண்களில் அறைந்துகொண்டு வருந்த, உள்ளமும் உடலும் உலைந்து, இடியேறுண்ட மராமரம்போலச் சாய்ந்து தரையில் விழுந்தான்]

138 உயிர்த்தி லன்னொரு நாழிகை யுணர்ந்தில னென்றும்
வியர்த்தி லன்[1]னுடல் விழித்திலன் கண்ணிணை[2] விண்ணோர்
அயர்த்த னன்[3]கொலென் றஞ்சின ரங்கையுந் தாளும்
பெயர்த்தி லன்னுயிர் பிரிந்திலன் கருணையாற் பிறந்தான்.

கொண்டுகூட்டு: கருணையாற்பிறந்தான், ஒருநாழிகை ஒன்றும் உயிர்த்திலன்; உணர்ந்திலன்; உடல்வியர்த்திலன்; கண்ணிணை விழித்திலன். அம் கையும் தாளும் பெயர்த்திலன்; உயிர்பிரிந்திலன். விண்ணோர் 'அயர்த்தனன்கொல்?' என்று அஞ்சினர்.

பொருள்: இராமன் ஒருநாழிகைநேரம் மூச்சுவிட்டானில்லை; சிறிதும் உணர்தலில்லாதிருந்தான்; (சாமானிய துக்கமுடையார் வியர்த்தல்போலன்றி, மிக்க துக்கமுடைமையால்) வியர்த்தானில்லை; (சோகத்தால் மூடிய) கண்களைத் திறந்தானில்லை. (போட்டகால், போட்டகை போட்டபடியே கிடக்க, அந்தக்) கைகால்களைத் திருப்பிப்போடாதவனுயினுன். உயிர் (மட்டும்) பிரியாதிருந்தான். (இந்தநிலையில் இராமனைக் கண்ட) இமையோர், 'அவன் நினைவு நீங்கி (உயிர் ஒடுங்கி) ஞனே? (இனி, உயிர்மீளானே?)' என்று அஞ்சினுர்கள்.

உயிர்த்தல் - சுவாசித்தல் - மூச்சுவிடுதல். ஒன்றும் - சிறிதும். அயர்த்தல் - மறத்தல் - நினைவுநீங்கல். அம் கை - அழகிய கை. தாள் - கால். பெயர்த்தல் - இடம்பெயர்த்தல் - இடம் மாறச்செய்தல்.

'ஒருநாழிகை' என்பதையும், 'ஒன்றும்' என்பதையும் 'உயிர்த்திலன்' என்பதனோடுமட்டுமன்றி, 'உணர்ந்திலன்' 'வியர்த்திலன்' 'விழித்திலன்' என்பவற்ரேடும் இயைத்துப் பொருள்கொள்ளல், பொருத்தமானது. கருணையாற் பிறந்தான் - (தேவர்பாலுள்ள) கருணையினுல் (இராமனுக) அவதரித்தவனுன திருமால்.

'ஸ்ரீராமனுக்குப் பெருந்துயரால் உயிர்பிரிந்தானென்பதுமாத்திரம் நிகழவில்லையே தவிர, உயிர்பிரிந்தார்க்கு உளவாகும் தன்மைகளெல்லாம் நிகழ்ந்திட்டதென்பதாம்.' (வை. மு. கோ.)

பாடபேதம்: [1] வெயர்த்திலன். [2] கண்ணிணை. [3] அயிர்த்திலன்.

139 தாங்கு வாரில்லைத் தம்பியைத் தழீஇக்கொண்ட தன்னை[1]
வாங்கு வாரில்லை வாக்கினுற் றெருட்டுவா ரில்லை
பாங்க ராயுள்ளோ[2] ரியாவரும் பட்டனர் பட்ட
தீங்கு தானிது[3] தமியனை யார்துயர் தீர்ப்பார்.

கொண்டுகூட்டு: பாங்கராயுள்ளோர் யாவரும் பட்டனர். (ஆதலால்,) தாங்குவார் இல்லை; தம்பியைத் தழீஇக்கொண்ட தன்னை வாங்குவார் இல்லை; வாக்கினுல் தெருட்டுவார் இல்லை. பட்ட தீங்குதான் இது. தமியனைத் துயர் தீர்ப்பார் யார்?

பொருள்: (இராமனுக்குத்) தோழராயிருந்தோர் யாவரும் இறந்திட்டார். (ஆதலால்; அவன் சாய்ந்துவிழும்போது விழுந்திடாதபடி தழுவித்) தாங்குவாரில்லை; (இறந்த) தம்பியைத் தழுவிக் கிடந்தவனைப் பிரித்தெடுப்பாரில்லை. (தேறுதல்) வார்த்தையால்

தெளியச்செய்வாரில்லை. (அவன் துணையில்லாமையால்) பட்ட துன்பம் இது. (உறவினர், நண்பர், பழகினவர் ஒருவருமில்லாமல் ஏகாங்கியாய்த்) தனிமையானவனுக்குத் துன்பம் தீர்ப்பார் யாரிருக் கின்றார்?

தழீஇ - தழுவி. வாங்குதல் - நீக்குதல்; பிரித்தெடுத்தல் (தமிழக ராதி). வாக்கு - வார்த்தை. தெருள் - தெளிவு. தெருட்டு - தெளிவி. பாங்கர் - தோழர். பட்டனர் - இறந்தார். தமியன் - தனியானவன்.

பாடபேதம்: [1] தடக்கை. [2] ஆயினோர். [3] தீங்கினுவிது, தீங்குமா விறைத், ஈங்குவாவிது.

'தீங்குதானிது' என்ற பாடம், திருநெல்வேலிக்கவிராயரவர்கள்வீட்டு ஏட்டுப்பிரதியிற் கண்டது.

## இராமன் நிலைகண்டு தேவர்முதலியோர் வருந்தல்

[ (இராமனுக்குத் *துக்கசமனம் செய்தற்கு உற்றார் நட்டார் பழகினர் இல்லையெனினும், அன்னியரொருவரும் இருந்திலரோ வெனின்,) அப்போது அந்தப் போர்க்களத்திலே கவந்தங்களும் பேய்களும் தம் கணவருடலைத் தேடித்திரியும் அரக்கியரும் பூதங்களும் நரிகளுமன்றி வேறு யாதொன்றும் இல்லை. இராமன்நிலையைக் கண்டு, தேவமாதரும் தேவரும் சோனைமாரிபோலக் கண்ணீர் சொரிந்தார்கள். இராமன் பரம்பொருளாதலால், பரம்பொருளின் உருவமான நிற்பனவும் திரிவனவுமான, சகல சராசரங்களும் நடுங்கின.

சிறிது உணர்வு திரும்பிவந்தபோது, இராமன் கண்விழித்துத் தம்பியை நன்றாகப் பார்த்து, 'இறந்துவிட்டான், பிழைக்க மாட்டான்' என்று எண்ணிச் செம்புண்ணிலே தீப்புகுந்தாற்போலும் துன்பத்தையடைந்து புலம்பலுற்றான்.

## இராமன் புலம்பல்

'(நீ, என் தந்தைசெய்யும் உதவிகளெல்லாஞ் செய்வானாயிருந்ததனால்,) என் தந்தை இறந்தானென்று தெரிந்தபோது, இறவாதிருந்தேன். (உனக்குப்பின் உன்போலுதவுவார் ஒருவருமில்லாமையால், நீ இறந்தபின், நான் இறவாதிரேன்.) நீ என் தந்தையாக (மட்டுமோ) இருந்தாய், தாயாகவும் சேயாகவும் தவமாகவும்

* துக்கசமனம் - துன்பத்தைத் தணித்தல்.

செல்வமாகவும் இருந்தாய்; என் நன்மையே உருவாகவிருந்த உன்னை யிழந்ததனால், எனக்கு நன்மையாயிருந்த தந்தைமுதலிய எல்லாரையும் தவம் முதலிய எல்லாவற்றையும் இழந்தேனானேன். (யான், அவ்வாறிழக்கும்படி, நீ, வன்னெஞ்சனாய்) என்னைத் தவிக்க விட்டுப் போயேபோனாய். நீ போனவுடனே, உன்னைப் பின் தொடர்ந்துவாராததனால், உனக்கு யாதோருதவியும் செய்யாமல் உன்னால் எல்லாவுதவியும் பெற்ற யான்) உன்னினும் வன்னெஞ்சனா யுள்ளேன்.

(பகைவனது அம்பினால்) ஊறுபட்டு உண்டாகிய புண்ணுடைய உன் உடலிலே உயிரைக் காணேன். (காணாதிருந்தும் தாமதியாமல் சாகேனாய்,) பொறுமையுடனே உயிரைச் சுமந்து கொண்டிருக்கின்றேன். (உயிரைவிட்டால் நிகழாததாகிய) அழுதலைச் செய்கின்றேன். (நீ இறந்தாயென்பது தெரிந்தவுடனே) இரண்டுகூறாகப் பிளந்து கீறாத இருதயமுடையேனன்றோ யான். அப்படிப்பட்ட யான், (இப்போது இறவாதது கிடக்க,) எப்போதுமே உயிரைவிடாமல் இருப்பினுமிருப்பேன்.

ஊரையும் உறவினரையும் பெற்ற தாயையும் உற்ற துணைவியையும் யானொருத்தனுக்காக, பிரிந்து, (நாட்டைவிட்டுக்) காட்டிற்கு வந்து (ஒருநாளன்று, ஒருமாதமன்று, ஓராண்டுமன்று,) பதினாலாண்டு வெயிலைப் பொருட்படுத்தாமல் (மழையையும் இலட்சியஞ்செய்யாமல்) எனக்கு வேண்டும் உணவுப்பொருள்களை அலைந்து தேடி அளித்து, நீ உண்ணாதிருந்தாய். (யான் உறங்குங் காலத்தும் என்னைப் பாதுகாப்பானாய் உறங்காதிருந்தாய். இவ்வாறாக நீண்ட பதினாலாண்டு ஊணுறக்கமின்றி என்னைப் பாதுகாத்ததனால்) தளர்ந்து மெலிந்து தூங்குகின்றாயோ! இந்தத் தூக்கத்தை நீக்கமாட்டாயோ!

உனக்கும் எனக்கும் உயிரும் ஒன்று, உள்ளமும் ஒன்று என்று சொல்லும்படியிருந்தோம். அப்படியிருக்கையில், உன்னை யிழந்தேன். இழந்தபின் (இறந்தொழியாது) திரிந்துழல்கின்றேன். உன்னோடுறவு என்னுயிரோ? யானோ? (என்தேகமோ? உன் உயிரோடு என் உயிர் போகாததனால், உயர்வான உயிர் உறவில்லை; போகாத உன்னுடலோடு என்னுடலும் போகாதிருத்தலால், என் உறவு, தாழ்வான உடலுறவே.)

சனகராசன்செய்த வேள்விகாணச் சென்று, சிவதனுசை முறித்து, (என் வாழ்வையழிக்கும்) விடமான சீதையை என் வாழ்க்கைத்துணையென்று கொண்டேன். அதனால், என்னைச் சேர்ந்தாரெல்லாரையும் மாய்ந்தாராகச்செய்தேன். மண்மேல் வைத்த ஆசையால், மாதா (கைகேயி) முதலானவர்க்குப் புண்மேல் வைத்த நெருப்பொத்த வருத்தத்தைப் புரிந்தேன். பெண் (சீதை) மேல்வைத்த ஆசையால், (நண்பரையும் தம்பியையும் இழக்கும்) இந்தப் பேறுகள் பெற்றேன்.

நீயோ மாண்டாய்! நானோ, (உன் பிரிவாற்றாமையால்) இறப்பேனாயிருக்கின்றேன் (இறந்தேதீருவேன்). (நாம் இருவரும் இறந்ததையறிந்தவுடன்) பரதன் அரசாளான். (இறந்திடுவான். நம்மோடு) உறவுபூண்ட (தாய்மார், சத்துருக்கன் உற்றோர் மற்றோர்) எல்லாரும் மனவருத்தம் தாங்கமாட்டாராய் மாண்டிடுவார்கள்']

140 அறந்தாய் தந்தை[1] சுற்றமு மற்றை யனவெல்லாம்[2]
துறந்தா[3] யென்று மென்னை மறாதாய் துணைவந்து[4]
பிறந்தா யென்னைப் பின்பு தொடர்ந்தாய் பிரிவாற்றாய்[5]
இறந்தா யுன்னைக் கண்டு மிருந்தே னெளியேனே.

கொண்டுகூட்டு: துணை(யாக) வந்து பிறந்தாய்! என்னை மறாதாய்! பிரிவாற்றாய்!, அறம் தாய் தந்தை சுற்றமும் மற்றையனவெல்லா(மு)ம் துறந்தாய்! என்னைப் பின்பு தொடர்ந்தாய்!, இறந்தாய். உன்னை (இறக்கக்) கண்டும் இருந்தேன். எளியேனே!

பொருள்: (எனக்குத்) துணையாக(த் தம்பியாக)வந்து பிறந்தோனே! என்சொல்லை மறுக்காதவனே! என்னைப் பிரிதலைச் சகிக்க மாட்டாதவனே! (என்னோடு காட்டுக்குவருதற்காக, வீட்டில் மனைவியுடன் வாழ்ந்துசெய்யும் இல்லறமாகிய காருகத்திய) கருமத்தையும் தாயையும் தந்தையையும் சுற்றத்தையும் மற்றெல்லாவற்றையும் பற்றறவிட்டுவிட்டு(க் காட்டுக்கு) என்னைப் பின்பற்றித் தொடர்ந்தவனே! (என்னைப் பிரியச்சகியாயாய் என்னுடனிருத்தற்காக எல்லாத் தியாகமும் செய்தநீ) இறந்திட்டாய். (என்பிரிவையே சகிக்கமாட்டாத) உன்னை (இறந்தவனாக)க் கண்டும் சகித்து இருக்கின்றேன். என் வன்கண்மையை என்னென்பேன்!

அறம் - தருமம். துறந்தாய் - (பற்றற்று) விட்டுவிட்டாய். மறுதாய் - மறுக்காதவனே. துணை - சகோதரன்; உதவி. துணைவந்து - துணையாக வந்து. பிரிவாற்றாய் - பிரிவைப் பொறாதவனே. 'எளியேன்' என்ற உடன் பாட்டுச்சொல், பிற குறிப்பால் 'வலியேன்' என்ற எதிர்மறைப்பொருளை வற்புறுத்தியுணர்த்தியது. 'வலியேன்', இங்கே, 'வன்கண்மை'யென்னும் கொடுமையை உணர்த்தியது.

'அறம் தாய் தந்தை சுற்றமும் மற்றும் என்னையல்லால் துறந்தாய்.' என்ற பாடத்துக்கு என்னையல்லால் (யானொருவன்தவிர - யான் ஒருவனை மட்டும் துறவாமல்) அறம் தாய் தந்தை சுற்றமும் மற்றும் துறந்தாய்' என்று அன்னுவயித்துப் பொருள்கூறலாம்.

பாடபேதம்: [1] எந்தை. [2] மற்று மெனையல்லால், மற்றை யவையல் லால். [3] மறந்தாய், [4] மெய்ம்மற வாதாய் துணைவந்து, மெய்ம்மை மறந் தா யுடன்வந்து, [5] பிரிவற்றாய்.

'என்னை மறுதாய்' என்ற பாடம் திருநெல்வேலிக் கவிராயரவர்கள் வீட்டு எட்டுப்பிரதியிற் கண்டது.

[ '(இந்திரசித்து, வஞ்சனையாக மறைப்க் கண்டு, நீ, பிரமாத்திரந் தொடுக்கத்தொடங்கியபோது, அதனால் உலகுக்குக் கேடுவிளையுமென்று, நான் தடுத்தேன். இந்தச்செயல், அந்த மேற்கூறிய உலகத்தைக் காக்கும் தருமதேவதையின்பால் எனக் குள்ள பயபத்தியாற் செய்ததாம். அந்த அறக்கடவுளுக் கஞ்சாமல்,) இராவணன் சான்றோனான சனகராசன்மகளைச்சிறையில்வைத்தான். (தன்னையஞ்சிய எனக்குப் பிரதிகூலனாகவும் அஞ்சாத அவனுக்கு அனுகூலனாகவும் இருப்பவனாய்) அறக்கடவுள் அவன் வசமானா னதலால் (அக்கடவுள் காக்கும்) மூவுலக முழுவதையும் முடிந் தொழியச்செய்வேன். அது செய்யேனேல், என் வில்லின் வீரத் தொழில் வெளியாகுமோ? ஆகாது. என் வில்வலிமை விராதனிடத் தும் காகாசுரனிடத்தும் எழு மராமரத்தினிடத்தும் வாலியினிடத் தும் கடலிடத்துமே சென்றது. (இந்திரசித்தினிடம் செல்லவில்லை.)

நம் தாய்மார், சுற்றத்தார், பிராமணர் ஆகிய இவர்கள் (காட்டுக் குப்போன நாம்) என்ன கதியடைந்தோமோ என்று ஏங்கித் தளர்ந்து மனமுறிந்து வருந்துவார்கள். அவர்களைக் காண ஆவலோடுநினைந்து நினைந்து தளர்கின்றேன். ஐயா, (அயோத்திக்குப்போய் அவர்களைக் கண்டு, அங்கே) எனக்குப் பொன்முடிபுனைதற்கு வருவாயாக.

முன், உன்னை நாகபாசம் சுற்றியபோதும், இப்போது பிரமாத் திரம்பாய்ந்தபோதும் உன்னுடனிராமல், உன்னைத் தனியேவிட்டுப் போய்விட்டேன். துன்புற்றகாலத்தில் உடனிராமல், அன்பற்றவர் செய்கையைச் செய்தேன். (நீ இறந்தொழிய, நான் உயிரோடு) நிலையாகவிருக்கின்றேன். தேசத்தாரெல்லாம் என்செயலைக் கண்டு சிரியாரோ?

விபீடணனுக்கு வாக்கினல் கொடுத்த இலங்கையரசைச் செய்கையினல் கொடுத்து முடியாமல்* முடிகின்றேன்.† இதனல் நான் பொய்யனுய் (எக்குற்றமும் இல்லாத) நம் குலத்துக்குப் பழியைப் படைத்துக்கொடுத்திட்டேன்' (என்று புலம்பினுன் இராமன்.)

### இராமன் அறிவுசோர்தலும் ஆவியுள்ளடங்குதலும்

இராமன். மேற்கூறியவாறு பலபலவிதமாகப் புலம்பி, எங்கித் தேம்பி அழுது பெருமூச்செறிந்து புலன்கள் ஒன்றன்பின் ஞென்ருக உள்ளடங்கத் தம்பியை ஆசையோடு, தழுவித் தன்னை மறந்து ஆவி உள்ளடங்கினுன்.‡

### இராமன்நிலைகண்டு இமையோர் துன்புறுதல்

இராமன் நிலைமையைக்கண்ட தேவர்கள், கண்களில் அறைந்து கொண்டார்கள்; துன்புற்றுக் கண்ணீர்வடித்தார்கள்; (முந்திய மூர்ச்சையினும் இந்த மூர்ச்சை ஆழ்ந்ததாயிருக்கின்றதே) 'முடிவு யாதாமோ?' என்று நடுங்கினுர்கள்; 'சுவாமீ! எங்கள்பொருட்டுத் துன்புறுகின்ருய்! உனக்குத் துன்பமுண்டோ?' என்று அன்போடு பின்வருமாறு கூறுவாரானுர்கள்:— ]

### தேவர்கள் இராமன் உண்மைநிலைமையை அவன் உணருமாறு கூறுதல்

141 உன்னை யுள்ள படியறியோ மூலகையுள்ள[1] திறமுணரோம்[2]
பின்னை யறியோ[3] முன்னறியோ[4] மிடையு மறியோம் பிறழாமல்
நின்னை வணங்கி நீவகுத்த நெறியே[5] நிற்ந்து மதுவல்லால்
என்னை படியேந் செயற்பால வின்ப துன்ப மில்லானே.

---

* முடியாமல் - நிறைவேற்ருமல். † முடிகின்றேன் - சாகின்றேன்.
‡ இப்படலம் உ௩0-ஆம் பாட்டிலுள்ளது.

கோண்டுகூட்டு: இன்பதுன்பமில்லானே! உன்னை உள்ளபடி அறியோம். உலகை உள்ள திறம் உணரோம். பின்னை அறியோம். முன் அறியோம். இடையும் பிறழாமல் அறியோம். நின்னை வணங்கி, நீ வகுத்த நெறியேநிற்கும் அதுவல்லால், அடியேம் செயற்பால என்னை ?

பொருள்: இன்பமும் துன்பமும் உள்ளான்போல நடிக்கின்றாயேயன்றி உண்மையாக) இன்பதுன்பங்கள் இல்லாதவனே! உன்னை (நாங்கள், எங்கள் பலவகைப்பட்ட மனத்தன்மைகளுக்கேற்றவாறு பாவிக்கின்றோமேயன்றி, உன் உண்மைத்தன்மையை) உள்ளபடியறியோம். (உன்யதார்த்த சொரூபத்தை உணராததுபோலவே,) உலகத்தையும் உள்ளபடியறியோம். பின்பு நடக்கப்போவதையறியோம். (எங்கள் ஆயுசுக்கு) முன்பு நடந்ததை (அறிவோமோவென்றால், அதுவும்) அறியோம். (எங்கள் ஆயுட்காலத்தின்) இடையே நடப்பதையும் மாறுபாடில்லாமல் அறியோம். உன்னை வணங்கி, நீ ஏற்படுத்தியிருக்கின்றநெறியில் நிற்பதல்லாமல், அடியேங்கள் (சுதந்தரமாகச்) செய்யற்பாலவை எவையிருக்கின்றன? (ஒன்றுமில்லையென்றவாறு).

திறம்-வகை; இயல்பு (தமிழகராதி). பிறழாமல்-மாறுபடுதலில்லாமல்.

பாடபேதம்: [1] உலகமுள்ள. [2] உள்ளேம்; அறியோம். [3] அறியேம். [4] அறியேம். [5] நெறியில்.

இந்தப்பாட்டில் 1, 2, 3, 4, 5 எண்ணுடைய பாடங்கள், திருநெல்வேலிக்கவிராயரவர்கள்வீட்டு ஏட்டுப்பிரதியிற் கண்டவை.

[ 'எங்கள் துன்பம் நீங்க, இராக்கதகுலத்தை வேரோடழித்தல் வேண்டுமென்ற எங்கள் வேண்டுகோளுக்கு இரங்கி, வேந்தர்குலத்திலே பிறந்தாய். (தீயோர்பலர் பூமியிற் பிறந்திட்டதனால்) தருமதேவதைக்கு நேர்ந்துள்ள பாரத்தைப் போக்குதற்கு (மனிதரூபத்துள்ளே) மறைந்துநிற்கின்றாய். (நாங்கள், உன்னை மனிதனென்று மயங்கும்படி, மனிதர்போலத் துக்கித்து மூர்ச்சித்து) உன்மாயையை எங்களுக்குக் காட்டலாமோ. ஆளுடையாய்!* அரசவமிசத்தில் அவதரித்த நீ (எங்களையுள்ளிட்ட) மூன்றுலகத்தோர் துன்பத்தையும் அகற்றிடுவாயென்ற ஆசையுடையேம். (நீ துக்கித்து மூர்ச்சித்திருப்பதாக நடிப்பதை உண்மையாக) ஏற்றுக்கொண்டு,

* ஆளுடையாய் - எங்களை அடிமையாகவுடையவனே.

நீ, அவன் (திருமால்) அல்லன், மனிதனென்றே (நினைந்து உண்மையை) மறந்தோமானேம். (எங்களை மறக்கச்செய்தது உன்மாயம்.) இதுபோன்ற மாயம் இல்லை. (இப்படி மாயஞ்செய்து மெய்யைப் புலப்படாமற்செய்து) பொய்யைப் புலப்படுத்தப்புகுந்தாயே'

'உலகங்களனைத்தையும் அவற்றில் உள்ள உயிர்களையும் உன் (வயிற்றின்) உள்ளேயும் வெளியேயும் உள்ளனவாக்குவாய்; அவைகளை உண்பாய்; உமிழ்வாய்; அளப்பாய்; தோண்டுவாய்: சிலம்பி கூடு செய்து கூட்டினுள்ளும்புறத்தும் இருத்தல்போல, நீ பிரபஞ்சத்தையுண்டாக்கி அதன் உள்ளும் புறமும் உறைவாயாயிருக்கின்றாய்'

'முன்பு பின்பு நடு என்பவையில்லாதவனே! (முக்காலமும் கடந்தவனே!) உன்னைத் துன்பம்தொடர்தலில்லையாதலால், (நீ இப்போது துயருற்றாய்போலவும் சோர்வுற்றாய்போலவும் விளையாடுகிற) இந்தத் துன்பவிளையாட்டு, உனக்கு இன்பவிளையாட்டேயாமென்றாலும், (தோற்றத்தையன்றி உண்மையை) அறியாத எங்களுக்குத் துன்பத்தையுண்டாக்குகின்றது. அந்தத்துன்பம், உன்னாற்போக்கக்கூடியதேயன்றி, எங்களாற் போக்கக்கூடாததாயிருக்கின்றது.'

'(எங்களுக்காக இராட்சச சங்காரஞ்செய்ய) இராமனாகவந்தாயென்று மனம் களிப்படைய, நாங்கள் பயம்நீங்கியிருந்தோம். (வந்த காரியம்-இராட்சச சங்காரம் முடியுமுன்) இடையிலே (இறந்தாய் போன்று மாயைசெய்து) துன்பம்விளைக்க, மெலிகின்றோம். இந்த மாயையை நீயே நீக்கவேண்டும். அதனை நீ நீக்காதேபோனல், எங்களால் நீக்கமுடியுமோ? உன்மாயையைநீக்கி எங்கள் துன்பத்தைப்போக்குவாயாக' என்று பலவற்றையும் எடுத்துச்சொல்லித் தேவர்கள் வருந்தினார்கள்.

திருமாலான இராமன், தான் பூமியிற் பிறப்பதற்குமுன்பு, மனிதருக்கியற்கையான செயல்களைச்செய்யச்சங்கற்பித்திருந்தபடி (தம்பி இறந்ததுன்பத்தைச் சகிக்கமுடியாமல்) ஆவி உள்ளே அடங்கிக்கிடந்தானனன்.

தூதர்கள், இராவணனிடம் போர்க்களத்தில் நிகழ்ந்தவைகளைத் தெரிவித்தற்குப் போனார்கள்.

பிரமாத்திரப்படலம் முற்றிற்று.

[தொடரும்]

௳

# *மின்சார வரலாறு

[ஸ்ரீ. பே. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L.]

மின்சாரம் இப்போது நமது வாழ்க்கையிலே மிகவும் நெருக்கமாய்ப் பின்னிக்கிடக்கிறது. மின்சாரவிசிறிகளின் அடியிலே உட்கார்ந்து, மின்சாரவிளக்கு வெளிச்சத்தில் படிக்கிறோம், சாப்பிடுகிறோம், பேசுகிறோம். வெளிச்சம் குறைந்தால் முணுமுணுக்கிறோம். மின்சாரத்தின் உதவியால் ஓடும் வாகனங்களில் ஏறிச்செல்லுகிறோம். தந்தியும் டெலிபோனும் மின்சாரத்தின் துணையாலே நடைபெறுகின்றன. சினிமாவுக்கும் பேசும்படத்துக்கும் ரேடியோவுக்கும் மூலாதாரமாக இருப்பது அதுதான். நமது வீட்டில் சாதாரணமாக வழங்கும் துத்தநாகவாளிகள், தகரப்பாத்திரங்கள், முலாம்பூசிய நிக்கெல்கரண்டிகள், கில்ட் நகைகள், போலிவைரங்கள் முதலியன அதன் துணையாலேதான் இயற்றப்படுகின்றன. பொன்னைக்காட்டிலும் விலையுயர்ந்ததாய் இருந்த அலுமினியத்தை இரும்பைக்காட்டிலும் மலிவாகச்செய்துவிட்டது மின்சாரம். நம்முடைய புத்தகங்களையும் பத்திரிகைகளையும் அது அச்சடித்துத் தருகிறது; நமது உணவுப்பொருள்களைக் குத்தி, அரைத்து, மாவாக்கித்தருகிறது; சமைக்கவும் செய்கிறது. நோயைத் தொலைக்க உதவும் எக்ஸ்-ரே (X-ray) கருவி அதன் விளைவுகளில் ஒன்று. சிகிச்சைமுறைகளிலும் எத்தனையோவகையாக டாக்டர்கள் மின்சாரத்தை உபயோகிக்கிறார்கள். இவ்வாறு மின்சாரமானது நமது சாமானியவாழ்விலும், சுகவாழ்விலும், நமது நோயுற்றநிலையிலும் நமக்கு உதவும் இன்றியமையாத் துணைவராக ஆகிவிட்டது. நம் இஷ்டப்படி அது குற்றேவல் செய்துவருவதைப் பார்த்தால் மின்சாரம் நமக்கு அடிமையாகிவிட்டது என்றுகூடச் சொல்லலாம்.

---

* இது, திருச்சி அகில இந்திய ரேடியோவில் 17-12-40-ல் ஒலிபரப்பப்பட்டது; திருச்சிரேடியோநிலைய நிர்வாக அதிகாரியின் அநுமதிபெற்றுப் பிரசுரிக்கலாயிற்று.

இந்த மின்சாரம் என்பது என்ன? அது எப்பொழுது தொடங்கிற்று? அதைக் கண்டுபிடித்தவர்கள் யார்? எப்பொழுது? எப்படி? அதைப் படைத்தவர்கள் யார்? வளர்த்தவர்கள் யார்? இந்தக் கேள்விகளுக்கு அரைகுறையாகத்தான் நாம் பதில் அளிக்கமுடியும்.

மின்சாரம் என்பது ஓர் இயற்கைச் சக்தி. இயற்கைச் சக்திகளை ஆக்கவும் அழிக்கவும் நம்மால் இயலாது. அவற்றின் மொத்த அளவைக் கூட்டவும் குறைக்கவும் நம்மால் முடியாது. நம்மால் செய்யஇயலுவதெல்லாம் அந்தச்சக்திகளுள் ஒன்றை மற்றொன்றாக மாற்றுவதுமட்டிலுமே. மின்சாரம் என்றென்றைக்கும் இருந்தது, இருப்பது, இருக்கப்போவது. அது இருக்கிறது என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ளவில்லை. அதைத் தெரிந்துகொண்டபிறகு அதன் தன்மைகளைச் சிறிதுசிறிதாக அறிந்துகொண்டுவருகிறோம்.

மின்சாரத்தின் இரண்டு இயல்புகள் அநாதிகாலமாகத்தெரியும். மிகமிகப் பழங்காலத்திலே தன் மனைவியின் அம்பர்மணிகளைத் துலக்கவேண்டிக் கரடித்தோலால் அவற்றைத் தேய்த்த காட்டு மனிதன், அம் மணிகள் உலர்ந்த சருகையும் புல்லையும் கவரக் கண்டான். ஒருவகைக் கடல்மீனை வேட்டையாடிய பழங்கால மனிதர் அதன் உடலைத்தொட்டதும் சுறீரென்று அதிர்ச்சிபெற்று உணர்ச்சியற்று விழுந்தார்கள். இவ் விரண்டுநிகழ்ச்சிகளும் மின்சாரச்செயல்கள். ஆனால் பழங்காலமனிதர்கள் இவற்றின் தத்துவத்தைத் தெரிந்துகொள்ளவில்லை. இரண்டாயிரத்தைந்நூறுவருஷங்களுக்குமுன் கிரேக்கநாட்டில் வாழ்ந்த தேலீஸ் (Thales) என்பவரும், ஆயிரத்துத்தொள்ளாயிரம்வருஷங்களுக்குமுன் ரோமராஜ்யத்திலிருந்த ப்ளீனி (Pliny) என்பவரும் இந்நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ப்ளீனிக்கு ஆயிரத்தைந்நூறுவருஷங்களுக்குப் பின் இங்கிலாந்தில் ஆண்ட எலிஸபெத் அரசியிடத்திலே கில்பேர்ட் (Gilbert) என்னும் வைத்தியர் ஒருவர் இருந்தார். அம்பர்மணிகளில்மட்டுமன்றிப் பிறபொருள்களிலும் உராய்வினால் கவர்ச்சிசக்தி தோன்றுவதை அவர் கவனித்தார். கிரேக்கபாஷையில் அம்பரை எலெக்ட்ரான் (Elektron) என்பார்கள். ஆதலால் முதன்முதலில் அம்பரில் காணப்பட்ட இந்தச் சக்திக்கு எலெக்ட்ரிஸிட்டி என்று கில்பெர்ட் பெயர்வைத்தார்.

தொடக்கத்தில் பொருள்களைத் தேய்த்துத் தேய்த்து மின்சாரத்தைச் சிறு அளவில் அவ்வப்போது இயற்றிச் சோதனைகள் நடத்திவந்தார்கள். மின்சாரத்தை உராய்வினால் இயற்றும் கருவிகளையும் அமைத்துக்கொண்டார்கள். ஆனால் இயற்றிய மின்சாரத்தைச் சேகரித்துவைக்க வழிதெரியவில்லை. ஆதலால் ஆராய்ச்சிகள் மிகவும் மெதுவாக நடைபெற்றன. பிறகு ஹாலந்து நாட்டிலுள்ள லேடன் (Leyden) நகரத்தில் சிலர் மின்சாரத்தைச் சேகரித்துவைக்கும் கருவி ஒன்றை இயற்றினார்கள். இயற்றியவர் யார் என்பதைப்பற்றிய விவாதம் கிளம்பிவிட்டது. அந்தக்கருவி இயற்றப்பட்ட ஊரைக்கொண்டு அதற்கு லேடன்ஜாடி என்று பெயரிட்டார்கள். ஆராய்ச்சியின் வேகம் சற்றே துரிதமடைந்தது. அமெரிக்காவிலுள்ள பெஞ்ஜமின் ப்ராங்க்ளின் (Benjamin Franklin) என்பவர் மேகங்களிடையேதோன்றும் மின்னலின் சுடரும் எலெக்ட்ரிஸிட்டி தெறிக்கும்போது உண்டாகும் சுடரும் ஒன்றுதான் என்றார். இதை வைத்துக்கொண்டுதான் நம்முடைய நாட்டிலே எலெக்ட்ரிஸிட்டியை மின்சாரம் என்று வழங்குகிறோம்.

சுமார் நூற்றைம்பதுவருஷங்களுக்குமுன்னே இட்டாலிநாட்டில் வைத்தியபாயிருந்த கால்வானி (Galvani) என்பவர் மின்சார ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்தார். அவர் மின்சாரசோதனை ஒன்றைச் செய்தபோது பக்கத்தில் கம்பியில் செருகியிருந்த செத்த தவளையின் கால்கள் வெடுக்கென்று துடித்தன. பிராணிமின்சாரம் என்று ஒன்று இருக்கிறது என்றார் கால்வானி. இல்லை என்று மறுத்தார் வோல்ட்டா (Volta) என்னும் மற்றொரு நிபுணர். முதன்முதலில், மின்சார ஓட்டத்தை இயற்றவல்ல மின்சாரக்கலத்தை அமைத்தவர் இவரே. இரண்டுவகை உலோகங்களினிடையே திராவகத்தில் நனைத்த ஈரத்துணியைக்கொண்டதுதான் இந்தக் கலம். இவ்விருவர்செய்த ஆராய்ச்சிகளுமாகச்சேர்ந்து தேங்கிக்கிடந்த மின்சார அறிவின் மடையைத் திறந்துவிட்டன. மின்சார அறிவு மிகத் துரிதமாகப் பெருகத்தொடங்கிவிட்டது. மின்சாரத்தை இயற்றுவது எளிதாகவே, அதைச் சோதிப்பதும் எளிதாயிற்று. அதனால் ஒவ்வொருநாட்டிலும் பல அறிவாளிகள் இந்தத்துறையில்

ம்பன்றூர்கள். அவர்கள்செய்த சோதனைகள் ஆயிரக்கணக்கானவை. அவைகளுள் சில பயன் அளித்தன. பலர்செய்த முயற்சிகள் உடனே பயன் அளிக்கவில்லை. ஆயினும் அம்முயற்சிகளும் வீண்போயின என்று சொல்லலாகாது. கோபுரத்தின் சிகரத்திலே பொற்கும்பத்தை அமைக்கவுதவும் சிற்பியை எல்லாரும் கொண்டாடுவது இயல்புதான். ஆயினும், சிறுசிறு செங்கல்களை வைத்துக் கட்டிய கொத்தனும், அஸ்திவாரத்துக்காகப் பள்ளம்தோண்டும் வேலையாட்களும் உண்மையாகவே கோபுரத்தை உயர்த்துகிறவர்களல்லரோ?

இங்கிலாந்திலே 1802-ஆம் வருஷத்தில் கரிப்பொருளாகிய க்ார்பனைக்கொண்டு டேவி (Davy) சோதனைசெய்தார். எண்பது வருஷங்களுக்குப்பிறகு இங்கிலாந்துநாட்டினரான ஸ்வானும் (Swan) அமெரிக்காநாட்டினரான எடிஸனும் (Edison) கரிக்கம்பி மின்சாரவிளக்கை இச்சோதனையின் பயனாக இயற்றினர். மின்சாரத்தின் வெப்பகுணத்தின் விளைவு இது. இப்போது வீட்டிலும் தெருவிலும் நாடகமேடைகளிலும் அழகாக ஒளிவீசும் மின்சாரவிளக்குக்கள் யாவும் இதன் பலவகைத் தோற்றங்கள்.

நூற்றுநாற்பதுவருஷங்களுக்குமுன்னே டேவியும் வேறு இருவரும் தண்ணீரை இரண்டு வாயுக்களாக மின்சாரத்தின் உதவியால் பகுத்தார்கள். இது மின்சாரத்தின் இரசாயனகுணத்தின் விளைவு. இந்த இரசாயனத்துறையிலே எத்தனையோ பொருள்கள் பகுக்கப்படுகின்றன; சேர்க்கவும்படுகின்றன. அச்சுக்கள் இயற்றுவதும், முலாம்பூசுவதும், தகரம் துத்தநாகம் முதலிய தகடுகள்செய்வதும், தூயசெம்பை இயற்றுவதும், களிமண்ணிலிருந்து அலுமினியத்தை உண்டாக்குவதும் இதன் அற்புதச்செயல்கள்.

மிகவும் அற்பமாகத் தோன்றும் நிகழ்ச்சிகளினின்று மிகப்பெரிய பயன்கள் உண்டாகிவிடுகின்றன. இது ஒவ்வொருவரும் கண்ட அனுபவம். மின்சாரத்துறையிலும் இப்படியே. தொங்கவிட்ட காந்த ஊசியின் பக்கத்திலே மின்சார ஓட்டம் நிகழ்ந்தால் ஊசி ஒதுங்குகிறது என்று டென்மார்க் தேசத்தினரான எர்ஸ்டெட் (Oersted) சொன்னார். இதனால் என்ன? என்றூர்கள் பாமரர்கள்.

பயனைக்கருதாமல் விஞ்ஞானிகள் மேன்மேலும் ஆராய்ந்துகொண்டு வந்தார்கள். காந்தக்கட்டையின்பக்கத்தில் கம்பிச்சுருளை அசைத்தால் கம்பியிலே மின்சாரம் தோன்றுகிறது என்றார் பாரடே (Faraday); சபைநடுவே இதை நிகழ்த்திக்காட்டினார்; 'என்ன விந்தை!' என்றார்; அவ் விந்தையைப் பாமரர்கள் உணரவில்லை! 'இதனால் என்ன பிரயோஜனம்?' என்றாள் ஒரு சீமாட்டி. 'கைக்குழந்தையால் என்ன பிரயோஜனம்?' என்று பதில்கேட்டார் பாரடே. "இது எதற்கு உதவும்?" என்று பரிகசித்தார் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாயிருந்த க்ளாட்ஸ்டன் (Gladstone). "உங்களுக்கு வரிதானே முக்கியம். இதன்மேல் வரிபோடும் காலமும் வரும்" என்றார் பாரடே. பாரடே சொல்லியபடி இதன் விளைவுகள் கணக்கில் அடங்காதவையாய் ஆகிவிட்டன. மோட்டார், டைனமோ என்னும் கருவிகள் இதினின்று வளர்ந்தவை. மின்சாரவிசிறியும், ரயிலும், டெலிபோனும், ரேடியோவும் இதன் அற்புத விளைவுகள்.

மின்சாரத்துக்கும் காந்தத்துக்கும் உள்ள தொடர்பினால் தந்தி தோன்றிற்று. தந்தி நிலத்தை வளைத்துச்சென்றது; கடலையும் ஊடுருவிச்சென்றது. இந்தக் கடல்தந்திவகைக்குத்தான் கேபிள் என்ற பெயர் இடப்பட்டது. வானவெளியிலும் தந்தி பாய்ந்தது; இதைத்தான் கம்பியில்லாத்தந்தி என்கிறோம். மிகச்சிறந்த விஞ்ஞானிகள் பலர் இந்தத்துறையிலும் முயன்றிருக்கிறார்கள். தந்தியின் சங்கேத ஒலிகளை அமைத்தவர் மோர்ஸ் (Morse). கேபிள் சாத்தியமானது கேல்வின் (Kelvin) முதலியோர் முயற்சிகளால். ஹேர்ட்ஸ் (Hertz), லாட்ஜ் (Lodge), மார்க்கோனி (Marconi) முதலியவர்களின் முயற்சிதான் கம்பியில்லாத்தந்தியாக மலர்ந்தது. நம் நாட்டு ஜகதீசசந்திரபோஸும் (Jagadish Chandra Bose) இந்தத் துறையில் ஆராய்ச்சிகளை நடத்தியவருள் ஒருவர்.

ஸ்காட்லாந்துநாட்டினராகிய பெல் (Bell) என்பவர் அமெரிக்காவிலே செவிடர்பள்ளிக்கூடம் நடத்திவந்தார். இவரே டெலிபோன்கருவியை அமைத்தவர். இங்கிலாந்துநாட்டினராகிய ஹ்யூஸ் (Hughes) என்பவரே மைக்ரோபோன்கருவியை இயற்றியவர். இங்கிலாந்திலுள்ள ப்ளேமிங் (Fleming), வால்வு என்னும்

கருவியை இயற்றினர். அமெரிக்காவிலே டி-பாரெஸ்ட் (De Forest) என்பவர் அக்கருவியிலே சில மாறுதல்களைச் செய்தார். இவர்களுடைய முயற்சிகளெல்லாம் ஒன்ருகச் சேர்ந்துதான் ரேடியோக் கருவியாக மலர்ந்து, உலகெங்கும் ஆனந்தத்தை அளித்துவருகின்றன; அறிவொளியைப் பரப்பிவருகின்றன.

ராண்ட்ஜென் என்பவர் கண்டுபிடித்த எக்ஸ்-ரே என்னும் கிரணங்கள் மின்சாரத்தால் இயற்றப்படுபவை. சிற்சிலநோய்களை இவற்றின்மூலம் அறிந்துகொள்ளமுடிகிறது. சிற்சிலநோய்களை இக் கிரணங்கள் குணப்படுத்துகின்றன. வார்ப்படங்கள்போன்ற பொருள்களின் உட்புறநிலைமையையும் தன்மையையும் இவை தோன்றச்செய்கின்றன. ஆதலால் சூக்ஷ்மதிருஷ்டியுள்ள கண்களாக இவை பயன்படுகின்றன. இக்கிரணங்களைத்தவிர வேறு வகைக் கிரணங்களும் மின்சாரத்தால் இயற்றப்படுகின்றன. அவையும் சிகிச்சைமுறைகளில் வைத்தியர்களால் கையாளப்படுகின்றன.

அயலிடத்தே தோன்றும் நிகழ்ச்சிகளையும் மின்சாரம் நமக்குத் தெரிவிக்கமுயலுகிறது. இதைத்தான் டெலிவிஷன் என்கிருர்கள். மின்சாரத்தை ஆதாரமாகவோ, துணையாகவோ கொண்ட கருவிகளின் தொகை கணக்கற்றது. எண்ணிறந்த வழிகளில் மின்சாரமானது நமக்கு இப்போது பயன் அளித்துவருகிறது. அதனல் நாம் அடையும் பயன்கள் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டேவருகின்றன.

தொடங்கியகாலம் இது, இடம் இது என்று சொல்லுவதற்கு இயலாததாய், மிகவும் அற்பமாய்த் தொடங்கிய மின்சாரம், இப்பொழுது நிலத்தையும் நீரையும் வானையும் அளாவியதாய், பலவகையான சராசரங்கள் அனைத்திலும் இருப்பதாய், எங்கும் பரந்த பரம்பொருள் என்று சொல்லும்படி ஆகிவிட்டது. இடவேற்றுமைகளையும் நிறவேற்றுமைகளையும் பாராட்டாமல் உலகம் எங்கும் விஞ்ஞானிகள் முயன்றுவருகிருர்கள். அதனல் மின்சாரத்தின் சரிதமும் நாளுக்குநாள் விரிவடைந்து மேன்மேலும் வளர்ந்து கொண்டேவருகிறது.

---

# பண்டைக்காலத்து நாகரிகம்

[ ஸ்ரீ. த. இராமநாதபிள்ளை அவர்கள், B.A., (LOND.) ]

சசூ-ஆம் பக்கத் தொடர்ச்சி.

## எகிப்தியர்

இற்றைக்கு 6000 ஆண்டுகட்குமுன்னரே எகிப்தியர் மிகச் சீர்திருந்தியநிலைபடைந்திருந்தனரெனவும், யூதர் யவனர் உரோமர் என்றற் றொடக்கத்தோர் எகிப்தியரிடம் தம் நாகரிகவாழ்க்கைக்குவேண்டிய பொருள்களைப் பெற்றதுமன்றி, அவரிடம் பல கலைகளையும் வித்தைகளையும் கற்றனரெனவும் மேனாட்டாசிரியர்கள் செப்புகின்றனராகலின், எகிப்தியருடைய வரலாற்றை ஆராய்தல் பயனுடைத்தாம்.

அன்றியும், தமிழ்நாட்டு மூவேந்தராகிய சேர சோழ பாண்டியர் செங்கோல்செலுத்தியகாலம் மிகப்பழையதென்பது ஒருதலையாகலின், தமிழருக்கும் எகிப்தியருக்கும் யாதேனும் தொடர்பு உண்டோ என்பதைத் தேர்தல் தமிழ்மொழிப்பற்றுடையோர் யாவருக்கும் இன்பம்விளைக்கும் என்பதில் ஐயமில்லை.

பண்டைப்பொருள்களை ஆராய்வோர் எகிப்தியருடைய முக்கோணக்கோபுரங்களுள் சேமிக்கப்பட்டிருக்கும் உடல்களையும் கலன்களையும் கருவிகளையும் ஆராய்ந்தும், அக்கோபுரச்சுவர்களில் தீட்டப்பட்டிருக்கும் சித்திரங்கட்கும் எழுத்துக்களுக்கும் பொருள் கூறியும், அக்கோபுரங்களுள் கிடைக்கும் யானைக்கொம்பு கருங்காலித்துண்டு முதலியவற்றில் எழுதப்பட்டிருக்கும் வரலாறுகளைப் படித்தும் எகிப்தியர் கி. மு. 4000 ஆண்டுகட்குமுன் நாகரிகநிலையடைந்திருத்தல்கூடுமெனக் கருதுகின்றனர்.

எகிப்தியர்குரு மனேதோ என்பான், மீனன் முதலிய 330 மன்னரைப்பற்றிய ஒரு வரலாற்றை வரைந்தனன். அவ்வரலாற்றை யவனவாசிரியன் கரடோற்றஸ் கி. மு. 470-ல் படித்தனன். எகிப்தியர், யானைக்கொம்புகளிலும் கற்பாறைகளிலும் 'பப்பீரஸ்' ஓலையிலும் கலன்களிலும் வேட்டையாடல், கப்பல்கட்டல், போராடல்,

தெய்வந்தொழுதல் என்றுற்போன்ற காட்சிகளைச் சித்திரித்தது மன்றி, வரலாறுகளையும் பொறித்தனரெனவும் அறியக்கிடக்கின்றது. எகிப்தியர் இறந்தோரின் உடம்புகளை அழியவிடாமல் காக்கும் வித்தையை உணர்ந்திருந்தனராதலின் எகிப்தியவேந்தருடைய உடல்களை நாம் இன்றும் காணலாம். பண்டைய எகிப்தியர் உபயோகித்த பொருள்கள் சிலவும் உடம்புகள் சேமிக்கப்பட்ட சாலைகளில் கிடைக்கின்றன.

ஆபிரிக்கப் பெருவனாந்தரத்தின் வடகீழ்க்கரையிலுள்ளதேசம் எகிப்து எனப்படும். எகிப்து கடலையும் வனாந்தரத்தையும் எல்லையாக உடையதாகலின், கானவரினின்று காக்கப்பட்டது. எனினும், சகாரா வனாந்தரத்தில் 270 குடிநிலங்கள் உளவெனவும், அவண் உறையும் கானவர் எகிப்தினுள் நுழைந்து சூறையாடினரெனவும் கூறுப. எகிப்தின் தலைநகராகத்துலங்கிய மெம்பிஸ் என்னும் நகரை அயலார் கரும்பூமி எனப் பொருள்படும் அஹிப்தா (ஹகிப்தா) என்னும் பெயரால் வழங்கினர். அப்பெயர்தான் எகிப்து எனத் திரிந்ததுபோலும். யவனர் நீலநதியை நீலஸ்நதி எனவும், எகிப்தியர் அதை அப்பி எனவும், அசிரியர் அதை யாறு எனவும், நீலநதியின் ஆற்றிடைக்குறையை எகிப்தியர் தம்மொழியில் யாற்று முற்றம் எனவும் கூறினர். இவை தமிழ்மொழியாதல்கூடும்.

## ஆதிகாலத்தரசர்

எகிப்தை ஆண்ட மன்னருள் முதல்மன்னன்பெயர் மீனன். மீனனுடைய வழியினர் 250 வருடங்கள் ஆண்டனர். இவ்வழியினருள் ஒருவன் அகன். அகனுடைய உடலும் கலன்களும் ஆயுதங்களும் புடைவைகளும் பொன்னுபரணங்களும் நாகதம் என்னும் ஈமக்காட்டில் எடுக்கப்பட்டன. ஆதிகாலத்து ஓவியர் ஆடு மாடு மான் நரி சிங்கம் வாத்து மீன் முதலை: என்பவற்றின் உருவங்களைத் தீட்டினர் எனத் தெரிகிறது. அக்காலத்து எகிப்தியர் குதிரையையும் ஒட்டகத்தையும் உபயோகித்திலர் எனத் துணியப்படுகிறது.

இரண்டாம் வம்சத்தினருடைய ஆட்சிக்காலத்தில் நீலநதியின் ஆற்றிடைக்குறையில் பூமி பிளவுபட்டுப் பலர் இறந்தனர் எனவும், நதியில் பதினொருநாள் தேன்வெள்ளம் பாய்ந்ததெனவும், மூன்றும் வம்சத்தினரே முக்கோணக்கோபுரங்களைக் கட்டினரெனவும்

அறிகிருேம். இம்முக்கோணக்கோபுரங்கள் கைரோ நகருக்கு அணித்தாய கிஸ்கே என்னும் இடத்தில் கட்டப்பட்டுள்ளன. கூபு (கீயுபு) என்பான் கட்டிய முக்கோணக்கோபுரம் 480 அடி உயரமானது. நரசிங்கக்கோபுரங்களும் கற்பாறைகளில் செதுக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று 65 அடி உயரமானது. மேனுட்டார் இந்நரசிங்கம் யாதாகுமோ என மயங்குகின்றனர். நரசிங்கம் மனிதத்தலையும் சிங்கவுடம்பும் உடையது. நரசிங்கக்கோபுரத்தின்கீழ்க் கோயில் குடையப்பட்டிருக்கும்.

வேந்தன் கூபு என்பவனேடு நட்புடைய ஞானி ஒருவன் 110 வயதினன். அவன், இரா என்னும், தேவனுடைய குரு மூன்று குமாரரைப் பெறுவனெனவும், அம்மூவரும் அரசுகட்டில் ஏறுவரெனவும் அறிவித்தனன்.

ஐந்தாம்வமிசத்தினருடையகாலத்தில் எழுதப்பெற்ற ஓலையொன்று லண்டன் நூதனசாலையில் உண்டு. மத்தியன்சாபு (பெப்பி I) கானவரோடு பொருதான். ஏழாம்வமிசவரலாற்றிலிருந்து மேன்மக்கள் பலர் குடியரசுமுறையாக ஆண்டனரெனவும், அக்காலத்தில் கிச்சஸ் என்னும் இடையர் எகிப்தினுட்புகுந்து தம் ஆணையைச் செலுத்தினரெனவும் துணியப்படுகிறது.

## இடைக்காலவேந்தர்

கி. மு. 2000-ல் பன்னிரண்டாம்வமிசத்தினனுகிய அமன்காபு I ஆண்டனன். அவன் எகிப்தைப் பலமாகாணங்களாகப் பிரித்துத் தேசாதிபதிகளை ஏற்படுத்தினன். அவன்காலத்தில் தனதிகாரிகள் சிறந்த உத்தியோகத்தினரென எண்ணப்பட்டனர். கோயிற்பூசைகளும் சமயக்கிரியைகளும் அரசாங்கத்தோரின் கட்டளைப்படியே நடைபெற்றன. அவன்மகன் சனகரத் என்பான் நூபியரோடு பொருதான் எனவும், கர்னுக் என்னும் நகரினுள்ள ஹாமன் கோயிலைக் கட்டுவித்தான் எனவும் கூறுவர். அமன்காபு III முதலைத் தலைத்தெய்வத்திற்கு ஒரு கோட்டம் நிறுவினன்.

பதின்மூன்ரும்வமிசத்தினருடைய ஆட்சியில் தாய்வழியுரிமை போற்றப்பட்டது. பின்பு இடையர் 200 ஆண்டுகள் ஆணைசெலுத்தினர். பதினேழாம்வமிசத்தினர் இடையரைத் துரத்திச் சுவாதீனம்பெற்றுச் செங்கோலோச்சினர். அக்காலத்தில் குதிரைப்

படைகளும் தேர்ப்படைகளும் விற்படைகளும் உபயோகிக்கப்பட்டன. எகிப்தியர் கமத்தொழிலையே விருத்திசெய்தனரெனவும், நிலைப்படை வைத்திருந்திலர் எனவும், கூலிப்படையே நாட்டைக் காத்ததெனவும் கூறுப. வேந்தர் சிலர் புல்லினாற் செய்த தலையணி அணிந்தனரெனவும், சிலர் கூந்தல் வளர்த்தனரெனவும் தெரிகிறது. அமன்காற்றெபு I, ஹாமனுடைய பூசாரிகளைப் புரந்தும் நூபியரிடம் திறைபெற்றும் நேமியுருட்டினன். ததீமிஸ் என்னும் பெயருடன் மூன்றுவேந்தர் இருந்தனர். மூன்றாவது ததீமிஸ் சிரியா நாட்டையும் சைப்பிரஸ்தீவையும் திறைகொடுக்கும் நாடுகளாக்கினான். இரண்டாவது அமன்காற்றெபுவும் மூன்றாவது ததீமிஸ் என்பானும் எதியோப்பியரோடும் பினீசியரோடும் பொருது வாகை சூடினர்.

## எகிப்தியருடைய தெய்வங்கள்

மூன்றாவது அமன்காற்றெபு, மெம்பிஸ் தீபு கர்ணுக் என்னும் இடங்களில் கோயில்கள் கட்டுவித்தான். அவன் தீபுநகரில் நாட்டிய மம்னனுடைய சிலை 78 அடி உயரமானது. நான்காவது அமன் காற்றெபு பாபிலோனியரோடு பொருதான். அவன்காலத்தில் ஹாமனுடைய வழிபாட்டினும் பகலவன் (சூரியன்) வழிபாடு பரம்பியது. எகிப்தியருடைய தெய்வங்கள் தமிழர்தெய்வங்களோடு மிக ஒப்புடையன. எகிப்தியர் சூரியனை இரா (Ra) எனப் பெயரிட்டு வணங்கினர். எகிப்தியர் நீலாற்றையும் வணங்கினர் என்ப.

ஆதியில் ஒசிரிஸ் என்னும் நந்திதேவரின்வழிபாடே சிறப்புற்றிருந்தது. ஒசிரிஸ் என்னும் நந்தியின் மகன் ஹோரஸ் தன் சகோதரன் செற்று என்பவனைக் கொன்றான். ஒசிரிஸ் தெய்வத்தின் மனைவியும் சகோதரியுமான ஐசிஸ் தேவதை ஹோரஸ்தேவருக்குத் துணைபுரிந்தனள். நரித்தலைத்தேவரும் நாய்த்தலைத்தேவரும் குரக்குத்தலைத்தேவரும் சிறுதெய்வங்களாகத் தொழப்பட்டனர். ஐசிஸ்தேவதை தலையில் ஒரு உருண்டையும் பாம்பும் அமைந்த தோற்றம் சிலைகளிற் காணப்படுகிறது. இத்தெய்வங்களெல்லாம் இராவின் வழிபாட்டைச் சேர்ந்தன.

தேந்தரா என்னும் இடத்தில் எழுந்தருளியிருக்கும் காதர் என்னும் காதற்றெய்வம் எடிபு என்னும் ஊரில் இருக்கும் ஹோரஸ்-

தேவரிடஞ் சென்று ஐந்துநாள் தங்குதல் வழக்கம். நான்காவது அமன்காற்றேபு ஒசிரிஸ்வழிபாட்டிலும் இராவழிபாட்டைச் சிறப்பித்தாஞகலின், தன் பெயரை அக்கன் அற்றன் எனத் திருத்தினுன். அற்றன் என்பது சூரியனைச் சுட்டும். அவன்காலத்தில் ஹாமனுடைய வழிபாடு குன்றியது. அக்கன் அற்றன் என்பவனின்பின் அரசாண்ட துத்தன்ஹாமன், ஹாமனுடைய வழிபாட்டைச் சிறப்பித்தான். இத் துத்தன்காமனுடைய உடம்பும் அவனுடைய மனைவியின் உடம்பும் இவ் விருபதாம்நூற்றூண்டில் ஆராய்ந்தெடுக்கப் பட்டன.

## எகிப்திய நேமிவேந்தர்:—கி. மு. 1500—கி. மு. 1000

ஆழிவேந்தன் இரமிசிஸ் I கீழையெகிப்தையும் மேலையெகிப்தையும் ஒருகுடைக்கீழாண்டான். இரண்டாவது இரமிசிஸ், இற்றையிற்றரோடு பொருது எகிப்தியருடைய ஆட்சியைச் சின்னுசியாவில் நாட்டினன்; அவன் பிரமாணங்களை வகுத்து நீதிசெலுத்திய அரசியல்ஞானி எனப்பாராட்டப்பட்டான்; ஹாமனுடைய உதவிபெற்று இற்றையிற்றரைக் கடிஷ் களத்தில்வென்று சமாதான உடன்படிக்கை எழுதிக்கொண்டான்; புலஸ்தியர் என்னும் கடற்கள்வரையும் தன் கப்பற்படையின் வலியால் ஒட்டிக் கலைத்தான்; அவன் தூர்த்தரைத் தண்டித்துக் குடிகளைக் காத்தோம்பினன்; அவனே எகிப்திய பேரோ என்னும் வேந்தருள் சிறந்தோன் என்ப. பண்டைக் காலத்திற் கூலிக்காரருக்கு நாணயமின்றித் தானியமே கூலியாகக் கொடுக்கப்பட்டது.

## எகிப்தியரின் இறுதிக்காலம்:—கி. மு. 1000—கி. மு. 30

கி. மு. 1000-ல் லிபியர் என்னும் வடஆபிரிக்கர் எகிப்தினுள் புகுந்து 170 வருடம் ஆண்டனர். அவர்களைப்பற்றிய செய்திகள் தெரிகின்றில. பின்பு கி. மு. 750-ல் பியாங்கி என்னும் எத்தியோப்பியர்வேந்தன் எகிப்தில் தன்னுணையைச் செலுத்தினன். கி. மு. 7-ஆம் நூற்றூண்டில் எகிப்தியருடைய வலிகுன்றியதாகலின், சாலடிய பாபிலோனியர், எகிப்தியர் ஆண்ட சின்னுசியா நாடுகளைக் கைப்பற்றினர். கி. மு. 601-ல் சாலடியவேந்தன் நபுகத்நேச்சர் சிரியா முதலிய நாடுகளில் தன் ஆணையைச் செலுத்தினன். எகிப்து தானிய மிகுந்த நாடாகலின், எகிப்தியருடன் சுமேரியரும் யவனரும்

பினீசியரும் உரோமரும் அராபியரும் எதியோப்பியரும் பார்சியரும் தமிழரும் பண்டமாற்றுச்செய்தனர். பினீசியாவை ஆண்ட எகிப்தியர் தேசாதிபதி நெக்கோ என்பான், கி. மு. 6-ஆம் நூற்றாண்டில் மாலுமிகள் சிலரை ஆபிரிக்காவைச்சுற்றிப் பிரயாணஞ்செய்யும்படி ஏவினன். அவன் நீலநதியையும் செங்கடலையும் இணைத்தற்கு ஒரு வாய்க்கால் தோண்டும்படி ஏவினன் எனவும், 1200 கூலிக்காரர் இறந்தமையால் அம்முயற்சி கைகூடவில்லை எனவும் அறியக்கிடக்கிறது.

கி. மு. 568 முதல் 525 வரை சாலடிய பாபிலோனியரும் அவர்பின் பார்சியரும் எகிப்தில் பொருதனர். கி. மு. 525-ல் டேறியஸ் I என்பான் நீலநதியையும் செங்கடலையும் ஒருவாய்க்காலால் இணைத்தனன் எனக் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது. கி. மு. 415-ல் எகிப்தியர் கிரேக்கநாட்டோரை எகிப்தியர் யவனர் என அழைத்தனர். யவனதேசத்துக் கூலிப்படையின் உதவியால் எகிப்தியர் பார்சியரைத் துரத்திச் சிறிதுகாலம் சுவாதீனமாயிருந்தனர். பின்னரும் பார்சியர் கி. மு. 343 முதல் 332 வரையும் எகிப்தை ஆண்டனர்.

கிரேக்கவேந்தன் அலேச்சாந்தர் பார்சியரைத் துரத்தி எகிப்தைக் கிரேக்கருடைய ஆட்சிநாடாக்கினான். கிரேக்கவம்சத்தினருள் முடிவில் ஆண்ட பெண் மூன்றும் கிளியப்பத்திரை என்பவள் யூலியஸ் கைசரின் நண்பன் அந்தோனி என்பானோடு ஊடியும் கூடியும் இன்புற்றாள். கி. மு. 32-ல் கிளியப்பத்திரை அகஸ்தரோடு பொருது தோல்வியடைந்து உயிர்நீத்தனள். அகஸ்தர்காலத்தில் யவனர் எகிப்தியருடைய துறைபாகிய பெருநிசியிலிருந்து புறப்பட்டுத் தமிழ்நாட்டுத் துறைகளாகிய முசிறி காவிரிப்பூம்பட்டினம் கொற்கை முதலிய இடங்களில் மிளகு பருத்தி அரிசி ஆரம் முத்து முதலிய பண்டங்கள் பெற்று ஏகினர் என அறியக்கிடக்கின்றது.

உரோமர் எகிப்தை ஆண்டகாலத்தில் கிறிஸ்தவரின் சூழ்ச்சியால் எகிப்தியருடைய மதம் சீர்கெட்டது. அந்நிலையில் அராபிய முகம்மதியரும் துருக்கி முகம்மதியரும் எகிப்தைக் கைப்பற்றிப் பல நூற்றாண்டுகளாக ஆண்டனராகலின், எகிப்தியருடைய சுவாதீனமும் சமயமும் அழிவெய்தின.

[தொடரும்]

# அகநானூற்றில் ஒரு செய்யுள்

[G. சுப்பிரமணியம் அவர்கள், M.A., B.L., சென்னை.]

ஒரு மனிதனுக்கு இவ்வுலகில் வேறு என்ன இருக்கிறது? மனைவி, மக்கள்: இவர்களே அவனது செல்வம்; அவனது இன்பம்; அவனது வாழ்நாள். திருவள்ளுவர்கருத்துப்படி ஒருவன் இவ்வுலகில் பெறுதற்குரிய தலைசிறந்த பாக்கியம் குழந்தைதான். பிற பேறுகளை யாம் மதிப்பதில்லை என்கிறார். ஆனால் இப்புத்திரப் பேறு ஒருவனுக்கு எவ்வாறு கிடைக்கும்? கற்பிற் சிறந்த ஒரு பெண்ணை அவன் அடையவேண்டும். அதைத்தான் திருக்குறளில்,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்"

என்றார். இவ்விதம் பெறுதற்கருமையான ஒரு பெண்ணை யெய்திய புருஷன் தன் ஆசையையெல்லாம், தன் அன்பையெல்லாம், தன் உள்ளத்தையெல்லாம் அவள்பாலே செலுத்துகிறான். அவளும் தன் வாழ்நாளையே அவனுக்கு ஸமர்ப்பணம்செய்கிறாள்.

அவ்விருவருக்கும் ஒருவரையொருவர் இன்றியமையாத ஒரு தொடர்பு எற்படுகிறது. இதையே நம் பண்டைத் தமிழ்ப்புலவர் "எழுமையும் தொடர்வதோர் உழுவலன்பு" என்பர். இந்தப் பிறப்பில்மட்டுமன்று, இனிவரும் பிறப்புக்களிலெல்லாம்,

"நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே"

என்று மனைவி வேண்டிநிற்கிறாள். இவ்விதம் இருவருடம்பையும் ஒன்றாய் இறுக்கிக்கட்டுவது காதல். இருவரிடையும் ஒன்றுபட்டு நிகழும் இவ்வித அன்பு ஒரு குழந்தையாய் உருவெடுத்து, அவ்விருவருக்கும் எய்ப்பில் வைப்பாய், இன்பக்களஞ்சியமாய், இலங்குகிறது. அச்செல்வக்குழந்தையின் தேசுற்றமுகத்தையும், மாசற்ற கண்களையும் காணக் காண அவர்கள் வாட்டமெல்லாம் ஓட்டமெடுக்கிறது. சித்தாந்திகள், "அவன் அவள் அது" என்று

ஆரம்பித்தார்கள். லௌகிகருக்கும் "அவன், அவள், அது" (கணவன், மனைவி, குழந்தை) ஆகிய மூவரும், என்றும் அழியாது இணைந்துநின்று ஒருவருக்கொருவர் இன்பம் அளித்துவரும் *நிச்சமுப்பொருள்களாய்க் காட்சியளித்துவருகிறார்கள்.

இவ்விதம் அன்பால் பிணிக்கப்பட்டு இணைந்துநிற்கும் ஆணும் பெண்ணும், எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வாற்றானும் நீக்கமற நிறைந்து ஒன்றிவாழ விரும்புவர். ஒரு கணவன் தன் காதலியிடம் என்னவேண்டுமென்றாலும் சொல்லலாம்; அவளும் அடக்கவொடுக்கத்துடன், பயபக்தியாய்க் கேட்டுக்கொண்டிருப்பாள். ஆனால் ஒன்றுமட்டும் அவளிடம் சொல்லிவிடக்கூடாது. அதுதான் 'பிரிவு' என்பது. நீரில்வாழும் மீன் நிலத்திற்கு வந்தால் எவ்விதம் துள்ளித் துடித்துத் துயருறுகிறதோ, அதுபோலக் காதலியும் காதலன் பிரிந்தால் துயரடைவாள்; உயிர்வாழமாட்டாள். பிரிவு என்றால் அவளுக்கு அது சாதல்தான். இதை ஒரு புலவர்,

"யாக்கைக்கு, உயிரிடத்தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவரியோளே"

என்று நயம்படப் பாடியிருக்கிறார். ஊழ்வசத்தால் ஒருவனும் ஒருத்தியும் ஒன்றுபட்டுச்சேரும்நிலையில் அவள் அவனிடம் வேண்டிநிற்பதென்ன? செல்வமும் வேறு சுயநலங்கருதிய பொருள்களுமல்ல. அவ்விதம் கேட்பது விலைமாதர்களுக்கேயுரிய மனப்பான்மை. ஆனால் குலமகள் தன் கொழுநனை முதலில் அடையும் அப்பொழுதே வேண்டிநிற்பது என்னவெனில், "இடரினும் தளரினும், மூப்பினும் தாழ்ப்பினும், இம்மையிலும் மறுமையிலும் என்னைக் கூடிப்பிரியேல்" என்பதுதான். அவனும், "நான் ஒரு பொழுதும் உன்னைப் பிரியேன்" என்று தெய்வம் காட்டித் தெளிக்கிறான். இதையே நம் ஆன்றோர்கள் "மெய்யிற்றீரா மேவரு காமம்" என்பர். பெண்களுக்குக் கொழுநரிடத்தில் அவ்வளவு பிரேமை.

---

* நிச்சமுப்பொருள்கள் - Eternal Trinity.

ஒரு சீராரிளமடந்தை ஏராரிளங்கிளியொன்றை அன்பாய் வளர்த்துவருகிருள். அக்கிஞ்சுகவாய் அஞ்சுகத்துடன் கொஞ்சிக் குலாவுவாள். கையிலெடுத்துப் பழங்கொடுப்பாள்; மெய்யில் அணைத்துப் பாலூட்டுவாள். அரைக்கணமும் அதைப் பிரிந்து வாழச் சகிக்கமாட்டாள். பஞ்சரத்திற் பூட்டிப் பாதுகாப்பாள். அதைக் காலாறச் சிறிது பறக்கவிடவேண்டுமானல், ஒரு சிறு பட்டுக்கயிற்றை அதன் காலிற் கட்டி, ஒரு நுனியைத் தான் கையிற் பிடித்துக்கொண்டு, அக்கிளியைப் பறக்கவிட்டு விளையாட்டுக் காண்பாள். விலங்குமாட்டிய குற்றவாளியைப்போல் அச்சிறையார் பைங்கிளி சோலைமரங்களில் தத்தித்தத்திப் பறந்துதிரியும். அது வெகுதூரம் பறந்துவிட்டது என்று அவள் எண்ணினல், உடனே கயிற்ருல் இழுத்து அச்சோலைப் பசுங்கிளியைத் தன் வசப்படுத்திக் கொள்வாள். காதலனையும் இதுபோல் கயிற்ருல் கட்டிக் கைவசப் படுத்திக்கொண்டாற்கூட நலமாயிருக்குமென்று காதலிக்குத் தோன்றுமாம்.*

இதற்கெல்லாம் காரணம் அன்புதான். எவ்விதத்திலும் கணவர் தம்மைவிட்டுப் பிரிந்துவிடக்கூடாது என்பதே அவர்கள் எண்ணம். இரவிற்கூட அவர்களுக்கு உறக்கம் சரியாய் வராது. கணவன் வெளியிற்போய்விட்டால் இன்னும் வரவில்லையே என்ற வருத்தமேலீட்டால் மனைவிக்கு உறக்கம் பிடிக்காது. அவன் வந்து விட்டால் எப்பொழுதாவது வெளியிற் போய்விடுவானே என்ற கவலையால் அவள் துயில்கொள்ளாள்.

---

* இக்கருத்தை ஆங்கிலக்கவியாகிய ஷேக்ஸ்பீயர் அழகுறக் கூறியிருக்கிருர். அது வருமாறு:—

"It is almost morning; I would have thee gone:
And yet no further than a wanton's bird;
Who lets it hop a little from her hand,
Like a poor prisoner in his twisted gyves,
And with a silk thread plucks it back again,
So loving jealous of his liberty."

"வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்"

என்பது தமிழ்மறை.

இப்பிரிவிற்கு ஆக்ஷேபணையெல்லாம் ஆணைவிடப் பெண்ணிடத்திலிருந்துதான் அதிகமாகவரும். அதற்கு இன்னுமொரு முக்கிய காரணமுண்டு. இங்கு நாம், தமயந்தி நளனுக்குச்சொல்லியதைச் சற்று ஞாபகப்படுத்திக்கொள்வது நலம். 'பெறலாமோ கொற்றவனே கோக்காதலனைக் குலமகட்கு' என்று அழுதுகொண்டே சொன்னாளன்றோ! இளங்கோவடிகளும், 'கணவனையிழந்தோர்க்குக் காட்டுவதில்' என்றார். ஒருபெண் வேறு எப்பொருளை இழந்தாலும் மீட்டும் ஒருக்கால் அடையலாம்; ஆனால் கணவன் நீங்கிவிட்டால் இவ்வுலகமே அவளுக்கு இல்லாமற்போடுவிடுமல்லவா?

கோதமநாட்டு இளவரசராகிய சித்தார்த்தர் உலக இன்பங்களைவிட்டுத் துறவியாக எண்ணினார். மனைவி யசோதரையிடம் சொன்னால் அவள் உடன்படமாட்டாள் என்பது அவருக்குநன்றாகத் தெரியும். ஆனால் வெளியே எப்படியாவது போய்விடவேண்டும். என்னசெய்தார்? இரவில், படுக்கையிற் படுத்துக்கொண்டு தூங்குவதுபோலப் பாவனைபண்ணினார். யசோதரை ஏமாந்துபோனாள். அவர் தூங்கிவிட்டதாக நம்பித் தானும் உறங்கினாள். நடுநிசியில் சித்தார்த்தர் எழுந்து தம் மனைவி யசோதரையிடம் சொல்லிக்கொள்ளாமல் அவளையும் பொன்போற் புதல்வனையும் விட்டுப் பிரியக்கருதினார். மனையாள் பாலகனோடு பஞ்சணையில் அயர்ந்து உறங்குவதைக் கண்டார். அவருடைய இளகியமனம் பேதுற்றது. யசோதரையை எழுப்பி அவளிடம்சொல்லாட விரும்பினார். மகனை எடுத்து முத்தாடக் கருதினார். ஆனால் தம் எண்ணம் குலைந்துவிடுமே என்று மனங்குழைந்தார். இரும்பினும் வலிதாக மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு வெளிக்கிளம்பிவிட்டார். யசோதரையை எழுப்பித் தம்முடையபிரிவை அவர் உணர்த்தியிருந்தால் இந்

நாடு புத்தர்பிரானருள்பொங்கியிருக்குமா? தமிழன்னை தன் மணிமேகலையை அணிந்திருக்கமுடியுமா? உலகசரித்திரமே வேறுமுறையில் எழுதப்பட்டிருக்கும். யசோதரைமட்டும் விழித்திருந்தால் சித்தார்த்தர் உலகைத்துறந்து புத்தராயிருக்கமுடியாது. அவள் அவரை வெளிச்செல்லவிட்டிருக்கமாட்டாள். அவ்வளவு சக்தி அவளுக்கு உண்டு. ஏன், அது எல்லாப்பெண்களுக்கும் உள்ள ஒரு சக்திதான். இவ்வுண்மையை அகநானூற்றுள் ஒருதாரணத்தால் ஆராய்வோம்.

ஒரு காதலனுக்குப் பொருள்தேடிவரவேண்டும்: என்ற எண்ணம் நெடுநாளாக இருந்துவந்தது. ஆனல் தன் காதலியையும் குழந்தையையும் எவ்வாறு விட்டு நீங்குவது? அவளிடம் சொல்லவுங்கூடாது. அவள் இதையெல்லாம் அறிந்து முன்னமே அணைபோட்டுவைத்திருந்தாள். அவனைக் கண்டு காதலித்த முதல்நாளே தன்னைவிட்டுப் பிரிந்து கொடிய காட்டுவழியே ஒருநாளும் அவன் போகக்கூடாது என்று வாக்குறுதிவாங்கியிருந்தாள். காடென்றால் அவளுக்கு அவ்வளவு பயம். அங்கு, காய்ந்து கருகிப்போன ஓமைமரங்கள் நின்றுகொண்டிருக்கும். எங்கும் கதிரவனல் கொளுத்தப்பட்டு வெம்மைநிறைந்த நீர்வறந்தகொடிய கானமாயிருக்கும். அங்குள்ள நெல்லிமரங்களின் பளிங்குபோன்று வெண்ணிறமுடைய காய்களெல்லாம் வெவ்வழல்வாட்டும் பாறைகளில் உதிர்ந்து சூதாடு கருவிகளைப்போலக் கருகி அழியும்படியான வெஞ்சுரமாயிருக்கும். கூர்ங்கற்கள் நிறைந்த பாதைகளெல்லாம் வழிப்போவார் விரல் நுதிகளை அறுத்துத் துயரிழைக்கும் கொடுமையையுடையன. இவ்விதமாகவெல்லாம், காட்டின்கொடுமையை அவள் அறிந்திருந்ததால், தன் கணவன் தன்னை வீட்டில்வைத்துவிட்டு, அக்காட்டின்வழியே பிரிந்துசெல்வது தருமநெறியல்ல என்பது அவள் துணிவு.

ஆனல் கணவன் அவளிடம் சொல்லாமல் எவ்விதமாவது சிலநாள் வெளிச்சென்று பொருளீட்டிவரத் தீர்மானித்தான்.

மனைவியைக் காணும்பொழுதெல்லாம் தன் பிரிவின்கண் மிகவுந் துன்பமுறுவாளே என்று அவனுக்குப் பரிதாபம் உண்டாயிற்று. அவ்வனுதாபத்தால் அவனுக்கு அவளிடம் என்றுமில்லாததோர் அன்பு உண்டாயிற்று; ஆகையால் அவன் அவளைப் புதிதுபுதிதாகப் பாராட்டிப் பசப்பலுற்றான். (இதைத்தான் 'தலையளி' அல்லது 'அளிநிலை' என்று சொல்வார்கள்.) இவன் இவ்வாறு பலபடப் பாராட்டிச்சீராட்டவும், மனைவிக்கு என்றுமில்லாததொரு சந்தேகம் பிறந்தது. அவனது புதியமுறையான அளவுகடந்த பேணுதலிலிருந்து அவன் தன்னைப் பிரியக்கருதினான் என்பதை அவள் நன்கு கண்டுகொண்டாள். அதனால் தன் கண்பார்வையினின்றும் நீங்கிச்செல்லவிடாது அவனைக் காக்க ஆரம்பித்தாள்; கண்ணில் எண்ணெய் ஊற்றிக்கொண்டு காப்பவர்களைப்போலக் காத்துவந்தாள். போர்புரிபவனொருவன் சுற்றிநிற்கும் தன் எதிரிகளை, அங்கும் இங்கும் கண்ணை வீசி எவ்விதம் கவனிப்பானோ அது போல் அம்புபோன்ற அவள் கண்கள் அலமாலுற்று அவனை எங்கும் தனியே போகவிடாது பார்த்துவந்தன. அவன், போகும் வழி காணாது திகைத்திருந்தான்.

(ஒருநாள் அவள் தன் குழந்தைக்குப் பூமாலை கட்டிக்கொண்டிருந்தாள். நல்ல தூய்தான செங்கழுநீர்மலர்கள். நீரில் பிறந்து நீரில் வளர்ந்த அச்செழுமலர்கள் சில்லென்று குளிர்ந்து மாணிக்கவொளிபெற்றிருந்தன. அம்மலர்களை இரண்டிரண்டாகத்தொடுத்துக்கட்டிமுடிந்தவுடன், அம்மாலையைக் குழந்தையின் தலையில் அணிவித்து அதன் கன்னத்தைத்தொட்டுக் கைநொடித்தாள். மனைவி தன்னைக் கவனியாது பராமுகமாக இருக்கும் அச்சமயத்திலேயே நழுவிவிடுவது நல்லதென்று அவன் விரைந்து வீட்டுவாயிற் பக்கம் வந்துவிட்டான்.) "ஒருமட்டும் தப்பிவிட்டோம்" என்று அடங்காமகிழ்ச்சிகொண்டு பயமில்லை என்று சற்றுத் திரும்பிப் பார்த்தான். அவன் கண்டதென்ன? அவன்மனைவி குழந்தையை

---

* வளைவுக்கோட்டுக்குட் காணப்படுவது சந்தர்ப்பத்திற்குப் பொருந்துமாறு ஊகித்துக்கொள்ளப்பட்டது.

வாரியெடுத்துக்கொண்டு, யாதொரு சந்தடியுமின்றித் தன் சிவந்த அழகிய பாதங்களால் நிலத்தில் வடுப்படாதவிதமாய், மிகவும் மெல்ல மெல்ல, குதிக்காலைத் தூக்கிக்கொண்டு விரலைமட்டும் ஊன்றிக் குறுகுறுவென்றுநடந்து தன்னருகில் வந்துகொண்டிருப்பதைக்க ண்டான். இங்ஙனம் வந்தவள் பிள்ளையும் கையுமாய் அவன்முன் நின்றாள்.

அவன் அவள்முகத்தை உற்றுநோக்கினான். அவள்வாயில் ஒரு புன்முறுவல் முள்ளைப்போன்ற வெள்ளிய பற்களை விளங்கக் காட்டியது. ஆனால் அம்முறுவல் அவள் அகத்தினின்றும் எழவில்லை. அது ஒரு பொய்யான வெற்றுச்சிரிப்பு. தனக்கு இயற்கையாகவுள்ள நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு: என்னும் காவல்களையெல்லாம் நீத்துத் தன்னந்தனியளாய் நின்றாள். அவள் ஒன்றும் வாய்திறந்து பேசவில்லை. ஆனால் அவள் முகம்மட்டும் ஒன்றைக் குறிப்பாக உணர்த்திற்று. ஒரே ஒரு எண்ணமே அவள் அகத்திலும் புறத்திலும் ஆர்ப்பரித்துநிற்பதைக் கண்டான். ஒரு சித்திரக்காரன் தான்தீட்டிய பாவையின்முகத்தில் ஏற்றிவைக்கும் குறிப்பானது அப்பாவையுள்ளமட்டும் எவ்விதம் அழியாமல் நிற்குமோ அதுபோல் ஆடாது அசையாது ஒரே குறிப்பை அவள்முகம் ஏந்திநின்றது. யோகி ஒருவன் எவ்விதம் உயிராவண்ணமிருந்து உற்றுநோக்கி ஒரேபொருளைச் சிந்தனையிலிருத்திநிற்பானோ அது போல் அவள் காணப்பட்டாள்.

இது ஒருபெரிய மனோவசியம்.* இதில் நிபுணனாயிருப்பவன் மற்றொருவனை வசியப்படுத்தவேண்டுமானால் அவன் கடைப்பிடிக்கும்முறை இதுதான். கண் இமைகொட்டாது அமர்ந்த முகத்தோடு, தான் கருதியபொருளொன்றையேகொண்டு சிந்தனை முகத்தில் தேக்கிநிற்பான். இவ்விதம் நெஞ்சோர்ந்தோடாநிலையில்நின்று தீவிரமாக இவன் நினைக்க நினைக்க, எதிரி வசப்பட்டுப்போவான்.

---

* இதைத்தான் மெஸ்மெரிஸம் (Mesmerism) என்று ஆங்கிலத்திற் சொல்வர்.

இதுவே மனைவசியத்தின் இரகசியம். அதுபோலவே நின்றாள், அவளும். கல்லையும் கரையச்செய்யும் அவளது தோற்றம் கணவன் மனத்தைக் கவ்விப்பிடித்தது. பளிங்குபோன்ற அவ ளுடைய தெள்ளியமுகத்தில் முன்பு தான் அவளுக்கு அளித்த சூளுரை திட்பமாய் வரைந்துதீட்டியிருப்பதைக் கண்டான். "பிரியேன்" என்று முன் ஒப்புக்கொண்டவன், இப்பொழுதும் தன் வார்த்தையை நிறைவேற்றவேண்டும் என்பதே அவளது சங்கற்பம். இக்கருத்து அவள்முகத்தில் அழுந்திப்பதிந்திருப்பதைக் கண்டான். வசியத்தாற் கட்டுண்டான். அவள்கண்ணில் நீர் ததும்பியது. அவள் தன் கண்ணீரைக் கணவன் காணாதிருக்கவேண்டித் தன் கைப்பிள்ளையின் தலையில் அணிந்துள்ள செங்கழுநீர்ப்பூவை மோந்துபார்ப்பதைப்போற்காட்டிப் பெருமூச்சுவிட்டாள். அச்சுவாசம்பட்டு அச்செங்கழுநீர்மலர்கள் வாடி வதங்கிவிட்டன. இவ்வளவு வெப்பத்தையும் அவள் ஆவி உள்ளே அடக்கிக்கொண்டிருப்பதை அவன் கண்டான். தான் அருகில்நிற்கும்பொழுதே இவ்வளவு வேதனைகொள்பவள், உண்மையிற் பிரிந்துபோய்விட்டால் பிழைக்கமாட்டாள் என்பதை உணர்ந்தான்; தான் வெளிச் செல்வதை மறந்தான்; மனைவியுடன் சந்தோஷமாகக் குழந்தையை எடுத்துக்கொண்டு வீடுதிரும்பினான். இக்கருத்தமைந்த அகநானூற்றுச் செய்யுள் வருமாறு:—

அளிநிலை பொறாஅ தமரிய முகத்தள்
விளிநிலை கொள்ளாள் தமியள் மென்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்
கண்ணிய துணரா வளவை யொண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த ஓமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை யீட்டுவட் டேய்ப்ப

உதிர்வன படூஉங் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்
விரல்நுதி சிதைக்கும் நிரைநிலை யதர
பரல் முரம்பாகிய பயமில் கானம்
இறப்ப வெண்ணுதி ராயின் அறத்தாறு
அன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன வாக என்னுநள் போல
முன்னங் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்றுநினைந் தொற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு
ஆகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணியுரு விழந்த அணியழி தோற்றங்
கண்டே கடிந்தனம் செலவே ஒண்டொடி
உழைய மாகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதும்நா மெனினே.*

குறிப்பு:—

விளிநிலைகொள்ளாள் — †கூப்பிடுதூரங்கூடப் பிரியவிடமாட்டாளாய், அல்லது அவன் தன்னைவிட்டு நீங்கும்நிலையாகிய பிரிவுக்கு உடன்படாதவளாய்.

நலமிகுசேவடி — நடக்கும்பொழுது குதிக்கால் நிலத்திற் பதிந்தும் விரற் பக்கம் பதியாமலும் இருக்கும்படியான நலம்மிகுந்த சிவந்தபாதம். (குதிக்கால் பின்பாரத்தால் நிலத்தை வடுச்செய்தல் பெண்களுக்குச் சிறப்பு. காளிதாசன் சாகுந்தலநாடகத்திற் காண்க.)

---

* இது, பொருள்வயிற்பிரியக்கருதிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது; பாலைபாடிய பெருங்கடுங்கோ என்னும் புலவர் பெருமானால் இயற்றப்பட்டது.

† கூப்பிடுதூரம் - Ear-shot distance.

| | |
|---|---|
| நிலம் வடுக்கொளாஅ | நிலத்திற் குதிக்கால் அழுந்தி வடுச்செய்யாதபடி தூக்கிக்கொண்டு விரல்களை ஊன்றி நடந்து என்றவாறு. |
| பளிங்கத் தன்ன பல்காய்நெல்லி மோட்டிரும் பர்றை யீட்டுவட் டேய்ப்ப உதிர்வன படூஉம் | பளிங்குபோன்று வெண்ணிறமுள்ள நெல்லிக்காய்கள் பாறைமேல் உதிர்ந்து அதன் வெப்பத்தால் வாடிச் சூதாடு கருவிகளைப்போற் கருநிறமடையும். |

சூதாடுகருவிகள் கருநிறமானவை என்பது,

"பஃறுடுப் பெடுத்த வலங்குகுலைக் காந்தள்
அணிமலர் நறுந்தா தூதும் தும்பி
கையாடு வட்டிற் றோன்றும்
மையாடு சென்னி மலைகிழவோனே"

என்ற அகநானூற்று 108-ஆம் பாட்டின் அடிகளும் அதற்குப் பேராசிரியர் எழுதியுள்ள "ஆடுதற்றொழில்பற்றியும் வடிவுபற்றியும் வண்ணம்பற்றியும் உவமைவந்தது" என்னும் விளக்கமும் நன்கு உணர்த்துவனவாகும்.

---